SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

02 புதன்கிழமை செப்டெம்பர் 2026 | 26 Wednesday September 2026 | Switzerland Edition

S TRAVEL
உங்கள் கனவுப் பயணம்...
எங்களுடன் இனிதாக ஆரம்பிக்கட்டும்!
S Travel GmbH
Luisenstrasse 21, 8005 Zürich, Switzerland
044 419 91 00
www.stravel.ch
info@stravel.ch

Food is our trade · World is our Market
Sai Trader since 1991 GmbH
Importeur fur frishe, exotische Gemuse | Fruchte & Fische
Aufeldstrasse 9 • 5417 Turgi
Tel. 044 885 86 50 • Fax 044 885 86 61
www.saitrader.ch • info@saitrader.ch
உணவுப்பொருட்களின் இறக்குமதியாளரும், மொத்த விற்பனையாளரும்.

MULTI CONSULTING
Versicherung & Finanz
IMMOBILIEN
VERSICHERUNG
FINANZ



வீடு வாங்க விற்க
வங்கிக்கடன்
காப்புறுதிகள்
வருமானவரிப்படிவம் நிரப்புதல்
சமூக அக்கறை எமது இலக்கு!!
079 765 50 57 | 8180 Bülach ZH | info@multiconsulting.ch | www.multiconsulting.ch

## September 2026: Switzerland-ல் மாறும் 12 முக்கிய விடயங்கள்!

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

## switzerland-ல் வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்தி!

CLICK HERE

## Switzerland பாதுகாப்பான தனித் தீவு அல்ல Aarau துப்பாக்கிச் சூட்டுக்குப் பின் பாதுகாப்பு நிபுணர் எச்சரிக்கை

CLICK HERE

## வேலை தேடி Switzerland வந்த 22 வயது இத்தாலிய இளம்பெண் Maria-வின் வாழ்க்கை துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது

CLICK HERE

IMPORTAS Cash & Carry
உலகின் சுவை உங்களுக்கு அருகில்!

ZÜRICH RETAIL SHOP
Importas Cash & Carry
Only 80 m from Letzipark
Baslerstrasse 102
8048 Zürich
Tel: +41 43 343 03 55
Fax: +41 43 343 03 56
Email: info@importas.ch
OPENING HOURS
Mon–Fri 10:00–20:00
Sat 09:00–18:00

BERN RETAIL SHOP
Importas Cash & Carry
Kranichweg 8
3074 Muri bei Bern
Tel: +41 31 951 24 44
Email: bern@importas.ch
OPENING HOURS
Mon–Fri 09:00–19:00
Sat 08:00–18:00

www.importas.ch

## Switzerland அரசியல் கட்சிகளின் 2025 வருமானம் CHF 24.6 மில்லியன்!

CLICK HERE

VM Cars
9 SEATER VAN
FOR RENT
Perfect for families, friends & groups



9 SEATS
EXTRA LONG VERSION
AUTOMATIC
REAR PARKING SENSORS
PER DAY CHF 130.-
400 KM PER DAY
UNLIMITED KM ON REQUEST
WEEKLY RENTAL WITH DISCOUNT ON REQUEST
BOOK NOW
WhatsApp +41 79 510 21 68
vmcars.ch@gmail.com
Instagram VMCars.ch
Spreitenbach AG / Dietikon ZH

CLICK HERE
7/24 DEPANNAGE URGENCE 022 782 08 88
LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier




* மக்கள் வாக்கெடுப்பு முதல் Gotthard Tunnel மூடல் வரை - பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய September மாற்றங்கள்

September மாதம் தொடங்குவதுடன் Switzerland-ல் அரசியல், பயணம், வேலை, கல்வி மற்றும் பொதுச் சேவைகள் தொடர்பான பல முக்கிய மாற்றங்கள் மற்றும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

1. * September 27 தேசிய வாக்கெடுப்பு: Switzerland மக்கள் Neutrality Initiative மற்றும் Food Initiative ஆகிய இரண்டு தேசிய முன்மொழிவுகள் குறித்து வாக்களிக்கின்றனர்.

2. * Bundesanwaltschaft மறுசீரமைப்பு: September 1 முதல் Federal Prosecutor's Office புதிய அமைப்பில் செயல்படுகிறது. சட்ட நடவடிக்கைகளின் செயல்திறன் மற்றும் Cybercrime மீதான கவனத்தை அதிகரிப்பது நோக்கம்.

3. * காட்டுத்தீ கட்டுப்பாடுகளில் தளர்வு: கோடைக்கால கடும் வெப்பம் மற்றும் வறட்சியால் அமல்படுத்தப்பட்ட தீ மூட்டும் கட்டுப்பாடுகளை சில மாகாணங்கள் படிப்படியாக தளர்த்துகின்றன. இருப்பினும் பகுதிக்கு பகுதி அபாய நிலை வேறுபடுவதால் உள்ளூர் விதிகளைச் சரிபார்ப்பது அவசியம்.

4. * EU Cybersecurity விதிகள்: September 11 முதல் EU Cyber Resilience Act-ன் சில கடமைகள் தொடர்பாக EU சந்தையில் செயல்படும் Swiss நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. Digital products-ன் பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் incident reporting போன்றவை முக்கியமாகின்றன.

5. * Ebookers Switzerland சேவை நிறுத்தம்: September 2 முதல் Swiss Ebookers website/app மூலம் புதிய பயணங்களை முன்பதிவு செய்ய முடியாது. ஏற்கனவே செய்யப்பட்ட bookings பாதிக்கப்படாது என நிறுவனம் தெரிவித்துள்ளது.

6. * Herbstferien தொடக்கம்: September இறுதியில் Bern, Basel-Stadt, Aargau, Schaffhausen, Solothurn, St. Gallen மற்றும் Schwyz ஆகியவற்றின் சில பகுதிகளில் Autumn school holidays தொடங்குகின்றன. சரியான தேதிகள் Gemeinde/பள்ளியைப் பொறுத்து மாறலாம்.

7. * பல்கலைக்கழக Autumn Semester: Zürich, Geneva, Basel மற்றும் St. Gallen பல்கலைக்கழகங்களில் September 14 முதல் வகுப்புகள் தொடங்குகின்றன. Lucerne மற்றும் Lausanne-ல் September 15 முதல் தொடங்குகின்றன.

8. * Gotthard Tunnel இரவு மூடல்: பராமரிப்புப் பணிகளுக்காக September மாதத்தில் பல இரவுகளில் Gotthard Road Tunnel மூடப்படுகிறது. குறிப்பாக September 7-11, 14-18, 21-25 மற்றும் September 28-October 2 காலங்களில் இரவு நேர மூடல்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

9. * Basel-Stadt அரசு ஊழியர்களுக்கு சம்பள மாற்றம்: September 1 முதல் Basel-Stadt மாகாண நிர்வாக ஊழியர்களுக்கான சம்பளத் தொகுப்பில் மாற்றங்கள் அமலுக்கு வருகின்றன. Night work, on-call duty, Sunday மற்றும் public-holiday allowances உள்ளிட்ட சில கொடுப்பனவுகள் 25% அதிகரிக்கின்றன.

10. * Lucerne Oktoberfest: Lozärner Oktoberfest September 11 முதல் 26 வரை Messe Luzern-ல் நடைபெறுகிறது.

11. * பண்டிகைகள்: Zürich-ன் பாரம்பரிய Knabenschiessen September 12-14 நடைபெறுகிறது. September 20 அன்று பல மாகாணங்களில் Federal Day of Thanksgiving, Repentance and Prayer அனுசரிக்கப்படுகிறது. September மாதத்தில் பல இடங்களில் பாரம்பரிய Alpabzug நிகழ்வுகளும் இடம்பெறும்.

12. * Autumn தொடக்கம்: September 23 Autumnal Equinox உடன் வானியல் அடிப்படையில் இலையுதிர் காலம் தொடங்குகிறது.




Aarau-வில் நடைபெற்ற Rave நிகழ்ச்சியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு, Switzerland மக்களிடையே நிலவி வந்த பாதுகாப்பு உணர்வை நீண்டகாலத்திற்கு பாதிக்கக்கூடும் என முன்னாள் தேசிய பாதுகாப்பு வலையமைப்பின் இயக்குநரும், முன்னாள் Neuchâtel பொலிஸ் தளபதியுமான André Duvillard எச்சரித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் பொதுமக்கள் அதிகளவில் கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்றுள்ளதால், எதிர்காலத்தில் Festival, Concert உள்ளிட்ட பெரிய நிகழ்ச்சிகளின் நுழைவாயில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள Bag Check சோதனைகளைத் தாண்டி, சில நாடுகளில் பயன்படுத்தப்படுவது போன்று X-ray பாதுகாப்புச் சோதனை வாயில்களை அறிமுகப்படுத்த வேண்டுமா என்பதையும் பரிசீலிக்கலாம் என Duvillard கேள்வி எழுப்பியுள்ளார். எதிர்காலத்தில் Switzerland-ன் Festival ஏற்பாட்டாளர்கள் இந்த விவகாரத்தை தீவிரமாக ஆராய வேண்டியிருக்கும் என்பதும் அவரது கருத்தாகும்.

“பாதுகாப்பான தீவு என்ற எண்ணம் இனி போதாது”

உலகின் பிற பகுதிகளில் காணப்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து Switzerland மட்டும் விதிவிலக்காக இருக்கும் என்ற எண்ணத்தை இனியும் வைத்திருக்க முடியாது என Duvillard தெரிவித்துள்ளார்.

Jihadism உள்ளிட்ட தீவிரவாத அச்சுறுத்தல்களையும் குறிப்பிட்ட அவர், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தாக்குதல்களை எவ்வாறு எதிர்கொள்வது, அவற்றுக்கு முன்கூட்டியே எவ்வாறு தயாராக இருப்பது என்பதே முக்கியமான கேள்வி என வலியுறுத்தியுள்ளார்.




AARAU: Aarau Schachen பகுதியில் Rave நிகழ்ச்சிக்குப் பின்னர் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 22 வயது இத்தாலிய இளம்பெண் Maria S.குறித்த மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன.

Maria சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு Italy-யிலிருந்து Switzerland வந்து Oftringen AG பகுதியில் வசித்து வந்ததாக சுவிஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. . Switzerland-ல் அவருக்கு குடும்பத்தினர் அருகில் இல்லாத நிலையில், தனியாக தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயன்றுள்ளார்.

Maria-வுக்கு நிரந்தரமான வேலை கிடைப்பதில் சிரமங்கள் இருந்ததாகவும், பல்வேறு குறுகியகால வேலைகளைச் செய்த பின்னர் நண்பர் ஒருவரின் Foodtruck-ல் பணியாற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு நெருக்கமானவர்கள் Maria-வை அன்பான, குழந்தைகளை மிகவும் விரும்பும் இளம்பெண்ணாக நினைவுகூருகின்றனர். Techno இசை மற்றும் Rave நிகழ்ச்சிகளிலும் அவருக்கு ஆர்வம் இருந்ததாக நண்பர் தெரிவித்துள்ளார்.

உயிருடன் இருந்திருந்தால் வரும் October மாதம் Maria தனது 23வது பிறந்தநாளைக் கொண்டாடியிருப்பார்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சுமார் 2.30 மணியளவில் Aarau Schachen பகுதியில் துப்பாக்கிச் சூடு தொடர்பான தகவல் Aargau பொலிஸாருக்கு கிடைத்தது.

இதில் Maria உயிரிழந்தார். மேலும் நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் காயமடைந்தனர்.

தற்போதைய விசாரணையில் பாதிக்கப்பட்டவர்கள் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டவர்களா என்ப தற்கான ஆதாரம் இல்லை; அவர்கள் தற்செயலாக பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற கோணமும் விசாரிக்கப்படுகிறது.




## பொருளாதாரம் எதிர்பார்த்ததைவிட வலுவாக வளர்ச்சி - நாடு முழுவதும் 98,700 காலிப்பணியிடங்கள்

BERN: Switzerland பொருளாதாரம் 2025-ல் முன்பு மதிப்பிடப்பட்டதைவிட வலுவாக வளர்ந்துள்ளதாக Federal Statistical Office (BFS) வெளியிட்ட புதிய தரவுகள் தெரிவிக்கின்றன. 2025-ல் நாட்டின் GDP 1.6% உயர்ந்துள்ளது.

இந்த வளர்ச்சிக்கு முக்கியமாக வலுவான உள்நாட்டு தேவை காரணமாக அமைந்துள்ளது. Domestic demand 2.5%, முதலீடுகள் 3.5% அதிகரித்துள்ளன.

### Pharma முதல் Finance வரை வளர்ச்சி

2025-ல் Chemical & Pharmaceutical துறை 8.1% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. Financial Services 6.6%, Wholesale Trade 5.2%, Health & Social Services 5.2%, Manufacturing 2.4% வளர்ந்துள்ளன.

குடும்பங்கள் மற்றும் தனியார் இலாப நோக்கமற்ற அமைப்புகளின் நுகர்வுச் செலவும் 1.7% அதிகரித்துள்ளது.

### 98,700 காலிப்பணியிடங்கள்

பொருளாதார வளர்ச்சியின் சாதகமான தாக்கம் வேலைவாய்ப்புச் சந்தையிலும் காணப்படுகிறது. 2026 April-June காலப்பகுதியில் Switzerland-ன் வேலைவாய்ப்பு எண்ணிக்கை முந்தைய ஆண்டைவிட 2% அதிகரித்து சுமார் 5.698 மில்லியனாக உயர்ந்துள்ளது.

அதே காலத்தில் நிறுவனங்கள் அறிவித்த காலிப்பணியிடங்கள் 2.7% அதிகரித்து 98,700 ஆக பதிவாகியுள்ளன.

### IT, Healthcare, Engineering துறைகளில் தேவை

குறிப்பாக Healthcare, IT மற்றும் Engineering துறைகளில் தேவையான திறமையான பணியாளர்களைக் கண்டுபிடிப்பதில் பல நிறுவனங்கள் தொடர்ந்து சிரமங்களை எதிர்கொள்கின்றன.

இதனால் திறமையான பணியாளர்கள் மற்றும் வேலை தேடுபவர்களுக்கு Switzerland வேலைவாய்ப்புச் சந்தையில் தொடர்ந்து வாய்ப்புகள் காணப்படுகின்றன.




## SP முதலிடம் - FDP-க்கு கணிசமான சரிவு; SVP-க்கு CHF 1 மில்லியன் உயர்வு

BERN: Switzerland Federal Parliament-ல் பிரதிநிதித்துவம் பெற்ற அரசியல் கட்சிகளின் 2025 நிதி விவரங்களை Eidgenössische Finanz-kontrolle (EFK) வெளியிட்டுள்ளது. நிதி விவரங்களை அறிவித்த 9 கட்சிகளின் மொத்த வருமானம் CHF 24.6 மில்லியன் என பதிவாகியுள்ளது.

2024-ல் இது CHF 25.6 மில்லியனாக இருந்தது. இதன்படி ஒரு ஆண்டில் மொத்த வருமானம் CHF 1 மில்லியன் குறைந்துள்ளது.

## எந்தக் கட்சிக்கு எவ்வளவு?

SP அதிகபட்சமாக CHF 7.9 மில்லியன் வருமானத்துடன் முதலிடத்தில் உள்ளது. 2024-ல் SP-க்கு CHF 8.2 மில்லியன் கிடைத்திருந்தது. அடுத்ததாக FDP - CHF 4.8 மில்லியன், SVP - CHF 3.8 மில்லியன், Die Mitte - CHF 2.7 மில்லியன் வருமானத்தை அறிவித்துள்ளன. GRÜNE CHF 1.8 மில்லியனும் GLP CHF 1.2 மில்லியனும் பெற்றுள்ளன.

குறிப்பாக FDP-யின் வருமானம் CHF 6.6 மில்லியனிலிருந்து 4.8 மில்லியனாக குறைந்துள்ளது. மாறாக SVP-யின் வருமானம் CHF 2.8 மில்லியனிலிருந்து 3.8 மில்லியனாக உயர்ந்துள்ளது.

## உறுப்பினர் கட்டணத்திலும் SP முன்னிலை

உறுப்பினர் கட்டணங்கள் மூலம் SP CHF 2.19 மில்லியனுக்கும் அதிகமாக பெற்றுள்ளது. Mandat வகிப்பவர்களிடமிருந்து பெறப்படும் பங்களிப்புகளிலும் SP CHF 484,267 உடன் முதலிடத்தில் உள்ளது. EFK மாதிரி அடிப்படையில் நான்கு கட்சிகளின் நிதி விவரங்களை நேரடியாகச் சரிபார்த்துள்ளது. அவற்றின் வருமானம் CHF 15.5 மில்லியன், அதாவது அறிவிக்கப்பட்ட மொத்தத் தொகையின் 63% ஆகும்.

Lega dei Ticinesi, ஆகஸ்ட் 31 வெளியீட்டு நேரம் வரை தனது 2025 கட்சி நிதி விவரங்களை வெளியிடவில்லை.




# 176,000 ஆண்டுகளுக்கு முன்பு Switzerland வானில் நிகழ்ந்த அதிசயம்!

## Chasseral மலையடிவாரத்தில் விண்கல் மழை - 2,000-க்கும் அதிகமான துண்டுகள் கண்டுபிடிப்பு

BERN: சுமார் 176,000 ஆண்டுகளுக்கு முன்பு, Switzerland வானுக்கு மேலே பூமியின் வளிமண்டலத்திற்குள் நுழைந்த ஒரு சிறுகோள் பல துண்டுகளாகச் சிதறி, Chasseral மலையடிவாரப் பகுதியில் விண்கல் மழையாக விழுந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த பிரமாண்ட விண்வெளி நிகழ்வின் தடயம் பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே கண்டுபிடிக்கப்பட்டது. 1984ஆம் ஆண்டு 15 கிலோவுக்கும் அதிகமான எடையுடைய முதல் பெரிய விண்கல் துண்டு Twannberg பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடல்கள் மற்றும் அறிவியல் ஆய்வுகளில் இதுவரை 2,000-க்கும் அதிகமான விண்கல் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவை Twannberg Meteorite என அழைக்கப்படுகின்றன.

**4.56 பில்லியன் ஆண்டுகள் பழமையானது!**

Twannberg விண்கல்லின் வரலாறு சுமார் 4.56 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, சூரியக் குடும்பம் உருவான ஆரம்பகாலம் வரை செல்கிறது.

கண்டுபிடிக்கப்பட்ட துண்டுகளை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், பூமியை நோக்கி வந்த விண்பொருளின் அளவு, எடை, வேகம் மற்றும் வளிமண்டலத்திற்குள் நுழைந்த கோணம் போன்ற அம்சங்களையும் மறுகட்டமைத்துள்ளனர்.

Biel/Bienne ஏரிக்கு மேலேயுள்ள Twannberg பகுதி, இந்த விண்கல் துண்டுகள் பரவிய முக்கிய சிதறல் பகுதியாகும்.

இந்த விண்வெளி வரலாற்றை பொதுமக்களும் நேரடியாக அறிந்துகொள்ளும் வகையில், Twann ரயில் நிலையத்திலிருந்து விண்கல் சிதறல் பகுதி வழியாக வழிகாட்டப்பட்ட நடைபயணமும் நடத்தப்படுகிறது. இதனை புவியியலாளர் மற்றும் எரிமலையியலாளர் Thierry Basset வழிநடத்துகிறார்.




# Schaffhausen-ல் 2027 மின்சார விலை குறைகிறது; சராசரியாக 5.5% தள்ளுபடி

## தனியார் வாடிக்கையாளர்களுக்கு 4.3% குறைவு - நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு ஆண்டுக்கு சுமார் CHF 62 சேமிப்பு

SCHAFFHAUSEN: Schaffhausen மாகாண மின்சார நிறுவனமான EKS, 2027 ஆம் ஆண்டிற்கான மின்சார கட்டணங்களை சராசரியாக 5.5% குறைக்கிறது. சந்தையில் மின்சார விலைகள் குறைந்திருப்பதே இதற்கான முக்கிய காரணமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் வாடிக்கையாளர்களுக்கு கட்டணம் 4.3% குறையும். ஒரு வழக்கமான நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு இதனால் ஆண்டுக்கு சுமார் CHF 62 சேமிப்பு கிடைக்கும் என EKS தெரிவித்துள்ளது.

வணிக வாடிக்கையாளர்கள் சராசரியாக 5.6% கட்டணக் குறைப்பை எதிர்பார்க்கலாம்.

### எரிசக்தி நெருக்கடியின் பின் விலைகள் சீராகின்றன

கடந்த சில ஆண்டுகளில் நிலை முற்றிலும் மாறுபட்டிருந்தது. 2023-ல் EKS மின்சார கட்டணங்களை சுமார் 25%, 2024-ல் 26%, 2025-ல் 7.3% உயர்த்தியது. 2026-ல் விலைகள் மாற்றமின்றி இருந்தன.

இப்போது சந்தை விலைகள் சீராகியுள்ளதால், 2027-ல் வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கிறது.

### Grid செலவுகளும் குறைகின்றன

மின்சார வலையமைப்பு செலவுகளும் குறைவதாக EKS தெரிவித்துள்ளது. குறிப்பாக Swissgrid வழங்கும் சேவைகளுக்கான செலவுகள் குறைந்திருப்பது இதற்கு காரணம்.

இதில் மின்வலையமைப்பின் நிலைத்தன்மையை உறுதி செய்யும் system services மற்றும் overload-ஐ தவிர்க்கும் congestion management செலவுகள் குறைந்திருப்பதும் அடங்கும்.




# வீணாகும் உணவிலிருந்து Surprise Menu - Olten-ல் புதிய Food Waste முயற்சி

OLTEN: உணவு வீணாவதை குறைப்பதுடன், அதனை ஒரு புதிய சமையல் வாய்ப்பாக மாற்றும் நோக்கில் Piazza Circulaire அமைப்பு Olten நகரில் “Menu Surprise” என்ற புதிய திட்டத்தை முன்னெடுக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், Restaurant-களில் பயன்படுத்தப்படாமல் மீதமாகும் அல்லது அதிகமாக இருப்பில் உள்ள உணவுப் பொருட்களை வைத்து புதிய Surprise Menu-களை சமையல்காரர்கள் உருவாக்க வேண்டும் என்பதே முக்கிய யோசனை.

### 2027 கோடையின் இறுதியில் திட்டம்

திட்டமிட்டபடி, 2027 கோடையின் இறுதிப் பகுதியில் பல வாரங்களுக்கு Olten-ன் பல Gastronomy நிறுவனங்கள் இதில் பங்கேற்கவுள்ளன.

ஒவ்வொரு Restaurant-மும் தங்களிடம் கிடைக்கும் மேலதிக உணவுப் பொருட்களைப் பயன்படுத்தி படைப்பாற்றலுடன் Menu தயாரிக்க முடியும்.

### மீதமான Bread-ல் Lasagne!

Food Waste-க்கு எதிராக நீண்டகாலமாக செயல்பட்டு வரும் Mirko Buri, மீதமாகும் உணவுகளை எவ்வாறு சுவையான புதிய உணவுகளாக மாற்றலாம் என்பதை விளக்கியுள்ளார்.

உதாரணமாக, மீதமான Bread-ஐ பயன்படுத்தி “Brotlasagne” தயாரிக்க முடியும். இத்தகைய உணவுகளுக்கு வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பும் கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### Restaurant-களில் ஏற்கனவே பல நடைமுறைகள்

Olten-ல் பல Restaurant-கள் Food Waste-ஐ குறைக்க ஏற்கனவே பல வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. மீதமான பொருட்களைக் கொண்டு அன்றைய Menu தயாரித்தல், காய்கறி வெட்டும்போது கிடைக்கும் பகுதிகளை Bouillon தயாரிக்கப் பயன்படுத்துதல், Vacuum மற்றும் Sous-vide முறைகளால் உணவின் பயன்பாட்டுக் காலத்தை நீட்டித்தல் போன்றவை இதில் அடங்கும்.

மேலும் பெரிய Portion வழங்குவதற்குப் பதிலாக, வாடிக்கையாளருக்குத் தேவைப்பட்டால் கூடுதலாக வழங்கும் முறையும் தட்டுகளில் மீதமாகும் உணவைக் குறைக்க உதவும் எனக் கூறப்படுகிறது.

### மக்களின் வீடுகளுக்கும் ஒரு செய்தி

Restaurant-களில் Food Waste குறைக்கும் நடைமுறைகள் ஏற்கனவே மேம்பட்டிருப்பதால், இந்தத் திட்டத்தை பொதுமக்களுக்கு ஒரு செய்முறை விளக்கமாகவும் பயன்படுத்தலாம் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

“Menu Surprise” உடன் அதன் Recipe-யையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கினால், வீட்டில் மீதமாகும் உணவுப் பொருட்களை புதிய உணவுகளாக மாற்ற மக்கள் கற்றுக்கொள்ள முடியும்.




# Zuerich-ல் புதிய வேலைவாய்ப்பு: Robot-க்கு துணி மடிக்க கற்றுக்கொடுத்தால் பணம்!

## வீட்டிலேயே அன்றாட வேலைகளை செய்து AI Robot-களுக்கு பயிற்சி - மாதத்திற்கு சில நூறு Francs கூடுதல் வருமானம்

ZÜRICH: துணிகளை மடித்தல், பொருட்களை அடுக்குதல், Containers-ஐ திறந்து மூடுதல் போன்ற சாதாரண வீட்டுவேலைகளைச் செய்து Robot-களுக்கு பயிற்சி அளிப்பதற்காக Zürich-ல் ஆட்கள் தேடப்படுகின்றனர்.

சர்வதேச சேவை நிறுவனமான TSMG, "Robotics AI Data Collection Operators" என்ற பெயரில் பல டஜன் பேரை நியமிக்கத் திட்டமிட்டுள்ளது.

### என்ன வேலை செய்ய வேண்டும்?

பங்கேற்பவர்கள் தங்களது வீட்டிலேயே குறிப்பிட்ட அன்றாட செயல்களை மீண்டும் மீண்டும் செய்து பதிவு செய்ய வேண்டும். திட்டத்தைப் பொறுத்து தலையில் Camera அல்லது உடலில் movement sensors அணிய வேண்டியிருக்கலாம்.

இவ்வாறு சேகரிக்கப்படும் Video மற்றும் movement data, எதிர்காலத்தில் Humanoid மற்றும் Service Robot-கள் மனித உதவியின்றி வீட்டு வேலைகளைச் செய்ய கற்றுக்கொள்வதற்கான AI Training Data-ஆக பயன்படுத்தப்படும்.

### மாதத்திற்கு சில நூறு Francs

இது வழக்கமான முழுநேர வேலை அல்ல. கூடுதல் வருமானம் பெறுவதற்கான Part-time வாய்ப்பாக திட்டமிடப்பட்டுள்ளது.

செய்யப்படும் பணியின் அளவைப் பொறுத்து பங்கேற்பவர்கள் மாதத்திற்கு சில நூறு Swiss Francs கூடுதலாக சம்பாதிக்கலாம் என TSMG தெரிவித்துள்ளது.

### அடுத்த 12-18 மாதங்களில் தேவை அதிகரிக்கலாம்

Robot நிறுவனங்களுக்கு உண்மையான மனித செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட Training Data அதிகம் தேவைப்படுவதால், இத்தகைய வேலைகளுக்கான தேவை அடுத்த 12 முதல் 18 மாதங்களில் கணிசமாக அதிகரிக்கும் என TSMG எதிர்பார்க்கிறது.

பின்னர் இந்தத் திட்டத்தை தொழிற்சாலைகள், Retail, Logistics மற்றும் Gastronomy துறைகளுக்கும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

Sj

# சிறி ஜுவல்லரி

உங்கள் ரசனைக்கேற்ப புதிய தங்க நகைகளை வாங்கவும் புதிய டிசைன்களில் ஆபரணங்களை செய்து கொள்ளவும், பழைய தங்கங்களை உருக்கி, புதிய தங்க நகைகள் செய்து கொள்ளவும், விரைவாக திருத்த வேலைகளும் செய்தும் தரப்படும்.

**நகைத்தொழிலில் நீண்ட காலம் அனுபவம் பெற்ற நாங்கள் தாலிக்கு பொன் உருக்கி வைரதாலிக்கொடி செய்து தருகிறோம்.**

வைர தாலி கொடி. மோதிரம், வளையல், பெயர் பெண்டன் மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.



Sj SRI JEWELLERY

Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
info@srijewellery.ch
079 898 51 01




# சர்வதேச கராத்தே போட்டியில் Switzerland

## தமிழ் மாணவர்களுக்கு இரு வெண்கலப் பதக்கங்கள்

International Basel Open Masters 2026 அனைத்துலக கராத்தே போட்டியில் Japan Karatedo Itosu Kai - Swiss Branch மாணவர்கள் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்று சிறப்பான சாதனையைப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 18 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். சர்வதேச போட்டியாளர்களுக்கு மத்தியில் Swiss Branch மாணவர்கள் தங்களது திறமை, ஒழுக்கம் மற்றும் கடின உழைப்பை வெளிப்படுத்தினர்.

* செம்பாய் சஜின் - Kata பிரிவு
வெண்கலப் பதக்கம்

*செம்பாய் நெசலினி - Kumite பிரிவு
வெண்கலப் பதக்கம்

இருவரின் வெற்றியும் அவர்களது தொடர்ச்சியான பயிற்சி, விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புக்குக் கிடைத்த சிறந்த அங்கீகாரமாக அமைந்துள்ளது.

*பயிற்சியாளருக்கும் சிறப்பு பாராட்டு

போட்டிக்காக வீரர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கி, அவர்களை சிறப்பாகத் தயார்படுத்திய சென்செய் விஷால் (Shwabdhesh Gowridhasan) அவர்களுக்கும் Japan Karatedo Itosu Kai - Swiss Branch தனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துள்ளது.

அவரது வழிகாட்டுதல், தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை வீரர்களின் முன்னேற்றத்திலும் இந்தப் பதக்க வெற்றியிலும் முக்கிய பங்காற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்கேற்ற ஏனைய வீரர், வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் அமைப்பு தனது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துள்ளது.

"ஒழுக்கம் • மரியாதை • விடாமுயற்சி • உழைப்பு" என்ற அடிப்படையில் தமது கராத்தே குடும்பம் தொடர்ந்து முன்னேறும் என Japan Karatedo Itosu Kai - Swiss Branch தெரிவித்துள்ளது.








# Bern மாகாணமும் X (Twitter) தளத்திலிருந்து வெளியேறுகிறது

## September முதல் X-ல் அதிகாரப்பூர்வ தகவல் தொடர்பு நிறுத்தம் - Instagram, Facebook, WhatsApp, YouTube-க்கு முன்னுரிமை



BERN: Bern மாகாண அரசு 2026 September முதல் X தளத்தில் தனது அதிகாரப்பூர்வ தகவல் தொடர்பை நிறுத்துகிறது.

அதிகமான மக்களை சென்றடையக்கூடிய சமூக ஊடகங்களில் கவனம் செலுத்துவதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக Bern மாகாண தகவல் தொடர்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இனி மாகாணத்தின் Social Media தகவல்கள் முக்கியமாக Instagram, Facebook, WhatsApp மற்றும் YouTube தளங்கள் வழியாக வெளியிடப்படும்.

X தளம் முன்னர் Twitter என அழைக்கப்பட்டது. 2022-ல் Elon Musk நிறுவனத்தை வாங்கிய பின்னர் அதன் பெயர் X என மாற்றப்பட்டது.


rib
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
உங்கள் கணக்குகள் – எங்கள் பொறுப்பு!
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நம்பகமான மற்றும் தொழில்முறை கணக்கியல் சேவைகள்.
கணக்குப் பதிவு – Buchhaltung
வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
MWST / VAT கணக்கீடு
சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
Quellensteuer
நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்
துல்லியம் • நம்பிக்கை • தனிப்பட்ட சேவை
உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில் நம்பிக்கையான துணையாக...
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tovilistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch


நல்லூரின் இதயத்தில் உலகத் தரச் சொகுசு அனுபவம்
SPECIAL OFFER
10% OFF
Exclusive Offer Valid Through
31 DECEMBER 2026
Use Promo Code:
CH2026
"WORLD-CLASS LUXURY EXPERIENCE IN THE HEART OF NALLUR"
Suisse RESIDENCY
SWISS COMFORT, JAFFNA SOUL.
booking@suisseresidency.lk
+94 21 221 08 88
www.suisseresidency.lk
+94 77 877 90 00

# ஐரோப்பாவின் புதிய இராணுவ சக்தியாக போலந்து? ரஷ்ய அச்சுறுத்தலுக்கு எதிரான பாதுகாப்புத் திட்டம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்யா-உக்ரைன் போர் ஐரோப்பாவின் பாதுகாப்பு நிலைகளை முற்றிலும் மாற்றியமைத்துள்ள நிலையில், போலந்து தனது இராணுவத்தை வரலாறு காணாத வேகத்தில் விரிவுபடுத்தி வருகிறது. ஒரு காலத்தில் ஐரோப்பாவின் நடுத்தர அளவிலான இராணுவ சக்தியாகக் கருதப்பட்ட போலந்து,

இன்று நேட்டோவின் கிழக்குப் பாதுகாப்பு அரணாக மாறி வருகிறது. இராணுவச் செலவினத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 5 வீதம் உயர்த்தியுள்ள வார்சா, பெருமளவில் புதிய ஆயுதங்களை வாங்குவதோடு மட்டுமல்லாமல், நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் நீளத்தில் எல்லைப் பாதுகாப்பு உள்கட்டமைப்பையும் உருவாக்கி வருகிறது.

### போலந்து இராணுவ விரிவாக்கம்:

இதன் பின்னணியில் போலந்தின் புவியியல் அமைப்பும் வரலாற்று அனுபவமும் முக்கியமானவை. போலந்தின் கிழக்கில் பெலாரஸ் மற்றும் ரஷ்யாவின் கலினின்கிராட் பகுதி அமைந்துள்ளன. உக்ரைன் போர் தொடங்கிய பின்னர், ரஷ்ய இராணுவம் உக்ரைனுக்கு எதிராக நடத்திய முழுமையான படையெடுப்பு, போலந்தின் பாதுகாப்புக் கவலைகளை பல மடங்கு அதிகரித்தது.

போலந்து, ரஷ்யா தனது இராணுவ நடவடிக்கைகளை உக்ரைனுக்கு அப்பால் விரிவுபடுத்தும் சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என்று கருதுகிறது.

அதனுடன், சைபர் தாக்குதல்கள், ஆளில்லா விமான ஊடுருவல்கள், உள்கட்டமைப்பு மீதான தாக்குதல்கள், தவறான தகவல் பரப்புதல் மற்றும் குடியேற்றத்தை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துதல் போன்ற கலப்பு போர் முறைகளும் அச்சுறுத்தல்களாகக் கருதப்படுகின்றன. நேட்டோவின் கிழக்குப் பகுதியில் இத்தகைய அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருவதாக சர்வதேச பாதுகாப்பு ஆய்வுகளும் சுட்டிக்காட்டுகின்றன.

இதனால் போலந்து, போர் தொடங்கிய





பிறகு பாதுகாப்பை உருவாக்குவது என்பதற்குப் பதிலாக, போர் தொடங்குவதற்கே இடமளிக்காத அளவுக்கு தடுப்புத் திறனை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றுகிறது.

### ஐரோப்பிய பெரிய தரைப்படை:

போலந்து தனது ஆயுதப்படைகளின் எண்ணிக்கையை மிக வேகமாக உயர்த்தி வருகிறது. 2025ஆம் ஆண்டில் நேட்டோ நாடாளுமன்றச் சபை வெளியிட்ட மதிப்பீட்டின்படி, கடந்த ஒரு தசாப்தத்தில் போலந்து தனது இராணுவத்தின் அளவை இரட்டிப்பாக்கியுள்ளது; அதன் ஆயுதப்படைகள் ஐரோப்பாவில் மிகப்பெரிய அளவிலான இராணுவமாக மாறியுள்ளன.

தற்போது செயற்பாட்டிலுள்ள இராணுவப் பணியாளர்களின் எண்ணிக்கை 220,000-ஐத் தாண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. நீண்டகால இலக்காக 300,000 செயற்பாட்டு இராணுவத்தினரும் சுமார் 200,000 காப்புப் படையினரும் கொண்ட மொத்தம் அரை மில்லியன் அளவிலான பாதுகாப்புப் படையை உருவாக்கும் நோக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. இது நிறைவேறினால், போலந்து ஐரோப்பாவின் மிகப்பெரிய மற்றும் அதிக ஆயுதமயமாக்கப்பட்ட தரைப்படைகளில் ஒன்றாக மட்டுமல்லாமல், கண்டத்தின் முக்கிய இராணுவ சக்தியாகவும் மாறும்.

போலந்தின் இராணுவ விரிவாக்கத்தின் பின்னால் மிகப்பெரிய நிதி முதலீடு உள்ளது. 2025ஆம் ஆண்டில் பாதுகாப்புக்காக அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4.7 விழுக்காடு ஒதுக்கப்பட்டது. இது சுமார் 187 பில்லியன் போலந்து ஸ்லோட்டி ஆகும். நேட்டோவின் பல உறுப்பு நாடுகள் பாதுகாப்புச் செலவினத்தை உயர்த்துவது குறித்து விவாதித்துக் கொண்டிருக்கும்போது, போலந்து ஏற்கன வே அதைவிட அதிகமான அளவில் முதலீடு செய்து வருகிறது. இதன் மூலம் ஐரோப்பிய நாடுகளில் பாதுகாப்புச் செலவினத்தின் முன்னணியில் போலந்து திகழ்கிறது.

இது வெறும் ஆயுதங்களை வாங்குவதற்கான செலவு அல்ல. புதிய இராணுவத் தளங்கள், வெடிமருந்துக் கிடங்குகள், விமானப் பாதுகாப்பு அமைப்புகள், எல்லைப் பாதுகாப்பு, இரா ணுவப் பயிற்சி, உள்கட்டமைப்பு மற்றும் புதிய தலைமுறை தொழி ல்நுட்பங்கள் ஆகியவற்றிலும் முதலீடு செய்யப்படுகிறது.

### தென் கொரியா -அமெரிக்கா ஆயுதங்கள்:

போலந்தின் இராணுவ நவீனமயமாக்கலில் அமெரிக்காவும் தென் கொரியாவும் முக்கிய பங்காற்றுகின்றன. குறிப்பாக தென் கொரியாவிடமிருந்து பெருமளவில் K2 Black Panther பிரதான போர்த் தாங்கிகள், K9 Thunder சுய இயக்க பீரங்கிகள் மற்றும் K239 Chunmoo பல்குழல் ராக்கெட் ஏவுதளங்கள் வாங்கப்படுகின்றன.

அதேவேளை அமெரிக்காவிடமிருந்து M1A2 Abrams போர்த் தாங்கிகள், HIMARS ராக்கெட் அமைப்புகள், Patriot வான்



பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் F-35 போர் விமானங்கள் போன்ற உயர் தொழில்நுட்ப ஆயுதங்களை போலந்து பெற்றுவருகிறது.

இதன் மூலம் போலந்து ஒரு பாரம்பரிய ஐரோப்பிய இராணுவத்திலிருந்து, நீண்ட தூரத் தாக்குதல், நவீன பீரங்கி, வான் பாதுகாப்பு மற்றும் கவசப் போர் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்த நவீன இராணுவமாக மாறுகிறது.

### தென் கொரிய ஆயுத திறன்:

போலந்து தென் கொரியாவைத் தேர்ந்தெ டுத்ததற்கு வேகமான உற்பத்தியும் விநியோகத் திறனும் முக்கிய கார ணிகளாகும். உக்ரைனுக்கு ஆயுத ங்களை வழங்கியதால் ஐரோப்பிய நாடுகளின் சொந்த ஆயுதக் கையிருப்புகள் குறைந்துள்ள நிலையில், விரைவாகப் பெருமளவு ஆயுதங்களை வழங்கக்கூடிய தொழில்துறை திறன் தென் கொரியாவிடம் உள்ளது.

மேலும், எதிர்காலத்தில் சில ஆயுத ங்களை போலந்திலேயே உற்பத்தி செய்வதற்கான தொழில்துறை ஒத்து ழைப்பும் வளர்ந்து வருகிறது. இதனால் போலந்து வெறும் ஆயுத இறக்குமதியாளராக இல்லாமல், ஐரோப்பாவின் முக்கிய பாதுகாப்புத் தொழில்துறை மையமாக உருவாகும் வாய்ப்பும் உள்ளது.

### East Shield - கிழக்குப் பாதுகாப்பு கேடயம்:

போலந்தின் பாதுகாப்புத் திட்டங்களில் மிகவும் முக்கியமானது East Shield எனப்படும் தேசிய தடுப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமாகும். இது ரஷ்யாவின் கலினின்கிராட் பகுதியிலிருந்தும் பெலார ஸிலிருந்தும் வரும் சாத்தியமான இரா ணுவ அச்சுறுத்தல்களை எதி ர்கொள்ளும் வகையில் உருவா க்கப்ப டுகிறது. இந்தத் திட்டம் போலந்தின் கிழக்கு எல்லையில் சுமார் 700 கிலோமீற்றர் பரப்பை உள்ளடக்கும். ஆனால் இது ஒரே தொ டர்ச்சியான சுவராக உரு வாக்க ப்படுவ தில்லை. மாறாக, நிலப்ப ரப்புக்கு ஏற்ப பல அடுக்குகளைக் கொண்ட பாது காப்பு அமைப்பாக வடிவமைக்கப்படுகிறது.

இதில் எதிரி இராணுவத்தின் நகர்வைத் தடுக்கக்கூடிய தடைகள், அகழிகள், வாகன எதிர்ப்பு அமைப்புகள், பாதுகாப்பு நிலைகள், கண்காணிப்பு அமைப்புகள், ஆளில்லா விமான எதிர்ப்பு தொழில்நுட்பம், தொடர்பு மையங்கள் மற்றும் இராணுவ உள்கட்டமைப்புகள் இடம்பெறும். போலந்து அரசு இந்தத் திட்டத்திற்காக சுமார் 10 பில்லியன் ஸ்லோட்டியை ஒதுக்கியுள்ளது. 2024-2028 காலப்பகுதியில் திட்டத்தை செய ல்படுத்தும் நோக்கம் அறிவி க்கப்பட்டுள்ளது.

East Shield குறித்து சிலர் இதனை இரண்டாம் உலகப் போருக்கு முன்பு பிரான்ஸ் உருவாக்கிய Maginot Line போன்ற மிகப்பெரிய எல்லைக் கோடாக ஒப்பிடுகின்றனர். ஆனால் உண்மையில் East Shield ஒரு நிலையான சுவர் அல்ல. நவீன போர் முறைகளைக் கருத்தில் கொண்டு, நிலப்பரப்பு, காடுகள், நீர்நிலைகள் மற்றும் செயற்கைத் தடைகள் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்படும் பல அடுக்குப் பாதுகாப்பு அமைப்பாக இது வடிவமைக்க ப்படுகிறது. IISS ஆய்வின்படி, சில பகுதிகளில் இந்தப் பாதுகாப்பு அமைப்பு எல்லையிலிருந்து 50 கிலோமீற்றர் ஆழம் வரை பரவக்கூடியதாக இருக்கும்.

2026ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்

பொறியியல் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப்படுகின்றன. போலந்து இராணுவத்தின் தகவல்படி, 2026 இறுதிக்குள் சுமார் 260 கிலோமீற்றர் எல்லைப் பகுதியை பொறியியல் ரீதியாகப் பாதுகாக்கும் திட்டம் உள்ளது.

இன்றைய உக்ரைன் போர், ட்ரோன்கள் மற்றும் மலிவான ஆளில்லா விமானங்கள் கூட மிகப்பெரிய இராணுவப் பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபித்துள்ளது. இதனால் East Shield திட்டத்தில் ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகள், ரேடார்கள், கண்காணிப்பு சென்சார்கள் மற்றும் மின்னணு உளவு தொழில்நுட்பங்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

அமெரிக்காவிடமிருந்து பெறப்படும் "Project Barbara" எனப்படும் உயரமான காற்று மிதவை ரேடார் அமைப்புகளும் போலந்தின் விரிவான கண்காணிப்பு வலையமைப்புடன் இணைக்கப்பட உள்ளன. இவை நீண்ட தூரத்தில் வான் மற்றும் தரை அச்சுறுத்தல்களை கண்டறிய உதவும்.

## நேட்டோவின் கிழக்குக் கேடயம்

போலந்தின் இராணுவ விரிவாக்கம் தனிப்பட்ட தேசியத் திட்டமாக மட்டுமல்லாமல், நேட்டோவின் ஒட்டு மொத்த கிழக்குப் பாதுகாப்பின் ஒரு பகுதியாகவும் பார்க்கப்படுகிறது. போலந்து ரஷ்யா மற்றும் பெலாரஸுடன் நேரடியாக எல்லையைப் பகிர்ந்து கொள்வதால், அது நேட்டோவின் முன்னணிப் பாதுகாப்பு நாடாக உள்ளது. போலந்தின் பாதுகாப்பு வலுப்பெறுவது ஜெர்மனி, பால்டிக் நாடுகள், ஸ்லோவாக்கியா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பையும் மறைமுகமாக வலுப்படுத்துகிறது.

2026 ஜூலையில் East Shield பணிகளில் ஜெர்மன் இராணுவப் பொறியாளர்களையும் போலந்து இணைத்துக் கொண்டது. இது திட்டம் நேட்டோவின் பரந்த கிழக்குப் பாதுகாப்பு முயற்சிகளுடன் இணைக்கப்படுவதற்கான மற்றொரு அறிகுறியாகும்.

## ஐரோப்பா இராணுவ சமநிலை மாற்றம்

போலந்தின் இந்த மிகப்பெரிய இராணுவ முதலீடு ஐரோப்பாவின் அதிகாரச் சமநிலையையும் மாற்றக்கூடும். பிரான்ஸ் அணு ஆயுதம் மற்றும் நீண்ட தூரத் தாக்குதல் திறன் கொண்ட முக்கிய இராணுவ சக்தியாகத் தொடர்கிறது. ஜெர்மனி தனது பாதுகாப்புச் செலவினத்தை அதிகரித்து வருகிறது. ஆனால் தரைப்படை, கவச வாகனங்கள், பீரங்கி மற்றும் கிழக்கு எல்லைப் பாதுகாப்பு ஆகியவற்றில் போலந்து முன்னணியில் செல்கிறது. இதன் விளைவாக எதிர்கால ஐரோப்பிய பாதுகாப்பு கட்டமைப்பில் போலந்தின் குரல் மேலும் வலுப்பெறும். குறிப்பாக ரஷ்யாவை எதிர்கொள்ளும் பாதுகாப்புக் கொள்கைகளில் வார்சா முக்கிய முடிவெடுக்கும் நாடாக உருவெடுக்கிறது.

போலந்து இன்று தனது இராணுவத்தை விரிவுபடுத்துவது வெறும் ஆயுதக் குவிப்பு அல்ல. இது ஐரோப்பாவில் உருவாகியுள்ள புதிய பாதுகாப்புச் சூழலுக்கான நீண்டகால தேசியத் திட்டமாகும். 220,000-க்கும் அதிகமான செயற்பாட்டு இராணுவப் பணியாளர்கள், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 5 விழுக்காடு பாதுகாப்புச் செலவினம், அமெரிக்க மற்றும் தென் கொரிய ஆயுதங்களின் மிகப்பெரிய கொள்முதல், உள்நாட்டு பாதுகாப்புத் தொழில்துறையின் விரிவாக்கம் மற்றும் 700 கிலோமீற்றர் நீளமான East Shield ஆகியவை போலந்தின் மாற்றத்தின் அளவை வெளிப்படுத்துகின்றன.

ரஷ்யாவுடனான நேரடி மோதலைத் தவிர்ப்பதே போலந்தின் முதன்மை நோக்கம். ஆனால் அதற்காக போதுமான இராணுவ வலிமையையும் தடுப்புத் திறனையும் உருவாக்க வேண்டும் என்பதே வார்சாவின் கணக்கீடு. இதன் மூலம் போலந்து எதிர்காலத்தில் ஐரோப்பாவின் மிகப்பெரிய தரைப்படை சக்தியாக மட்டுமல்லாமல், நேட்டோவின் கிழக்குப் பாதுகாப்பின் முதன்மைத் தூணாகவும், ரஷ்யாவுக்கு எதிரான ஐரோப்பிய தடுப்புக் கொள்கையின் முன்னணி நாடாகவும் உருவெடுக்கிறது.

உக்ரைன் போர் முடிந்த பின்னரும் இந்த இராணுவ மாற்றம் தொடரக்கூடும். ஏனெனில் போலந்தின் பார்வையில், இன்றைய ஐரோப்பாவில் பாதுகாப்பு என்பது வெறும் அமைதிக்காலக் கொள்கை அல்ல; எதிர்காலப் போரைத் தடுக்கத் தேவையான நிரந்தர தேசியத் திறன் ஆகும்.



TAMINAA
AYURVEDIC WELLNESS
Natürliche Schmerzlinderung ohne Medikamente gegen Stress,
Rückenschmerzen, Nackenschmerzen,
Schlafprobleme
DISCOUNT 25% OFF
BEST PRICE TREATMENT
Krankenkasse anerkannt!
Rückenschmerzen/ Nackenschmerzen
Stress
Migräne/ Kopfschmerzen
Entspannung
Migränelindernde
Stressabbau
Nacken/Rückenschmerzen
Schlafqualität
Buchen Sie jetzt und erhalten Sie
25 % Rabatt für November!
Nur für Sie!
Buchen Sie noch heute Ihren Termin!
+41 79 940 15 10
taminaa.ch
Zähringerstrasse 32 | 8001 Zürich
Krankenkasse anerkannt!
WIR KOMMEN AUCH ZU IHNEN NACH HAUSE, INS BÜRO ODER INS HOTEL
ZUHAUSE Hausbesuch
BÜRO Firmenbesuch
HOTEL Hotelbesuch
+41 79 940 15 10 | taminaa.ch | Zähringerstrasse 32 8001 Zürich
TAMINAA – Ihre Gesundheit in besten Händen




சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
பத்திரிகை
வாரத்தில்ஒருமுறை
உங்கள் கரங்களில்
மின்னிதழாக...
வேதாந்தி : 004178 6264375
supeedsam@gmail.com
சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில்
இணைய இங்கே தொடவும்....
CLICK HERE










சுவிட்ஸர்லாந்து தமிழ் கல்விச்சேவை நாடு தழுவிய மெய்வல்லுனர் போட்டிகளை UBS Kids Club விதிமுறைகளுக்கு இணைவாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடாத்தியிருந்தது.இதில் 13 வயதிற்கு உட்பட்ட மாணவிகளுக்கான 60 மீற்றர் ஓட்டப்போட்டியில்முதலிடத்தையும் நீளம் பாய்திலில் மூன்றாம் இடத்தையும் சசிகரன் சஞ்சனா பெற்றுக்கொண்டார்.பந்தெறிதல் போட்டியில்கருணாநிதி அருசியா முதலாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர். இவர்கள் இருவரும் சூரிச் ஒர்லிகோன் பாடசாலை மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் வாழ்ந்தபடியே மாதாந்திர AHV ஓய்வூதியம்?

## ஜெனீவாவில் முக்கிய பேச்சுவார்த்தை



சுவிட்சர்லாந்தில் பல ஆண்டுகள் பணியாற்றி AHV சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்குப் பங்களித்த பின்னர் நிரந்தரமாக இலங்கைக்குத் திரும்பும் இலங்கைப் பிரஜைகளின் ஓய்வூதிய உரிமைகள் தொடர்பாக ஜெனீவாவில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் ஜெனீவா தூதுவர் மேன்மைதங்கிய திரு. தசநாயக்க அவர்களுடன் நடைபெற்ற இந்தத் திட்டமிடப்பட்ட சந்திப்பில், சுதாகரன் கணபதிப்பிள்ளை மற்றும் சுலோஜன் சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### மாதாந்திர AHV ஓய்வூதியம் குறித்து ஆலோசனை

தற்போது நிரந்தரமாக இலங்கைக்குத் திரும்பும் தகுதியுடைய இலங்கைப் பிரஜைகள், தாங்கள் செலுத்திய AHV பங்களிப்புகளை குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் ஒருமுறை திருப்பிப் பெறும் நடைமுறையே முக்கிய வாய்ப்பாக உள்ளது.

இதற்கு மாற்றாக, அவர்கள் இலங்கையில் வசித்தாலும் தங்களுக்குரிய AHV ஓய்வூதியத்தை மாதந்தோறும் பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில், Switzerland-இலங்கை இருதரப்பு சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் சந்திப்பில் ஆராயப்பட்டன.

சுவிட்சர்லாந்து ஏற்கனவே பிற நாடுகளுடன் செய்துள்ள சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள், இலங்கையுடனான எதிர்கால ஒப்பந்தத்திற்குப் பயனுள்ள மாதிரிகளாக அமையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### முதல் கட்ட முயற்சி

இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்ததாகவும், இலங்கைப் பிரஜைகளின் AHV உரிமைகள் தொடர்பாக நியாயமான மற்றும் நீடித்த தீர்வை ஆராய்வதற்கான முக்கியமான முதல் படியாக அமைந்துள்ளதாகவும் சந்திப்பில் பங்கேற்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

### முக்கியக் குறிப்பு

இது ஆரம்பகட்ட கலந்துரையாடல் மட்டுமே. Switzerland-இலங்கை இடையே சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் இன்னும் கையெழுத்திடப்படவில்லை. எனவே தற்போதைய AHV விதிமுறைகளில் உடனடி மாற்றம் எதுவும் அமுலுக்கு வரவில்லை.


LAMELLE GLASS
& STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
சுவிஸின் ஒரே தமிழ்
கண்ணாடித் தொழிற்சாலை!
சுவிட்சர்லாந்து முழுவதும் சேவை
எந்த இடத்திலும், எந்த நேரத்திலும்!
உங்கள் வீட்டின் அழகையும்
பாதுகாப்பையும் அதிகரிக்க,
உயர்தர கண்ணாடிகளை நாமே
தயாரித்து நேரடியாகப்
பொருத்தித் தருகிறோம்.
BEST PRICE
எமது சேவைகள்:
• ஜன்னல் மற்றும் கதவு கண்ணாடிகள்
• குளியலறை கண்ணாடித் தடுப்புகள் (SHOWER GLASS)
• பால்கனி மற்றும் பாதுகாப்பு வேலி கண்ணாடிகள்
• சமையலறை அலங்காரக் கண்ணாடிகள்
சிறப்பம்சங்கள்:
• இலவச மதிப்பீடு (GRATIS OFFERTE) — உங்கள் இடத்திற்கே வந்து அளவீடு செய்வோம்.
• சொந்தத் தயாரிப்பு — மிகக் குறைந்த விலை, சிறந்த தரம்.
• நாடெங்கும் சேவை — ஜெனிவா உட்பட சுவிஸின் அனைத்துப் பகுதிகளுக்கும்.
உங்கள் தேவைகளை தமிழில் பேசி, தரமாகப் பெற்றிடுங்கள்!
VERNIER
48, Chemin Delay, 1214 Vernier
info@lamelle-glass.ch
GENÈVE
27, Rue du Grand-pré, 1202 Genève
info@lamelle-glass.ch
NYON
8, Rue de la Colombière, 1260 Nyon
nyon@lamelle-glass.ch
இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்:
PRABA +41 79 416 76 96 www.lamelle-glass.ch


7/24
DEPANNAGE URGENCE
022 782 08 88
LAMELLE GLASS
& STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier


NOLIMIT ONE
GmbH
ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag
wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch


தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE




# ஓய்வூதியத்திற்கு AHV மட்டும் போதுமா?

## 3 தூண் முறையை அறிந்திருப்பது ஏன் முக்கியம்?

Switzerland-இல் ஓய்வுக்குப் பின்னர் நிதிப் பாதுகாப்பை வழங்கும் அமைப்பு மூன்று தூண்களை (3-Säulen-System) அடிப்படையாகக் கொண்டது. AHV மட்டும் நம்பியிருப்பதைவிட, Pensionskasse மற்றும் தனிப்பட்ட Säule 3a சேமிப்பையும் முன்கூட்டியே திட்டமிடுவது முக்கியம்.

### 1வது தூண் - AHV

அரசின் அடிப்படை முதியோர் ஓய்வூதியமான AHV-இல், முழுமையான பங்களிப்புக் காலத்தைப் பொறுத்து மாதாந்திர ஓய்வூதியம் தற்போது CHF 1'260 முதல் CHF 2'520 வரை உள்ளது. திருமணமான தம்பதிகளின் இரண்டு AHV ஓய்வூதியங்களும் சேர்த்து அதிகபட்சமாக CHF 3'780 வரை வரையறுக்கப்படுகிறது.

முக்கியமாக, 13வது AHV ஓய்வூதியம் 2026 டிசம்பரில் முதன்முறையாக வழங்கப்படவுள்ளது.

### 2 வது தூண் - Pensionskasse

ஆண்டுக்கு குறைந்தது CHF 22'680 சம்பளம் பெறும் தகுதியான ஊழியர்கள் கட்டாய தொழில்சார் ஓய்வூதியமான Pensionskasse-இல் இணைக்கப்படுகின்றனர்.

ஓய்வு பெறும்போது சேமிப்பை மாதாந்திர ஓய்வூதியமாகவோ, மூலதனமாகவோ அல்லது இரண்டையும் இணைத்தோ பெற முடியும். சம்பளம் மற்றும் வேலை சதவீதத்தைப் பொறுத்து எதிர்காலத் தொகையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு ஏற்படலாம்.

### 3வது தூண் - Säule 3a

தனிப்பட்ட ஓய்வூதிய சேமிப்பான Säule 3a விருப்பத்திற்குரியது. அதேநேரம் வரிச் சலுகையும் வழங்குகிறது.

2026-இல் Pensionskasse உள்ளவர்கள் ஆண்டுக்கு அதிகபட்சமாக CHF 7'258 வரை 3a-வில் செலுத்தலாம். Pensionskasse இல்லாத தகுதியானவர்களுக்கு வருமானத்தின் 20 சதவீதம் வரை, அதிகபட்சமாக CHF 36'288 செலுத்த வாய்ப்புள்ளது.

### உங்கள் ஓய்வூதியத்தில் இடைவெளி இருக்கிறதா?

AHV பங்களிப்புகளில் விடுபட்ட ஆண்டுகள் உள்ளனவா என்பதையும், Pensionskasse Vorsorgeausweis-இல் எதிர்பார்க்கப்படும் ஓய்வூதியம் எவ்வளவு என்பதையும் முன்கூட்டியே சரிபார்ப்பது நல்லது.

AHV + Pensionskasse + Säule 3a ஆகிய மூன்றையும் சரியாகத் திட்டமிடுவதே Switzerland-இல் ஓய்வுக்குப் பின்னான சிறந்த நிதிப் பாதுகாப்பிற்கான அடிப்படையாகும் எனத்தெரிவிக்கப்படுகின்றது.




# வெளிநாட்டில் வாழ்ந்தால் 13வது AHV கிடைக்காதா?

## புதிய SVP கோரிக்கை

Switzerland-க்கு வெளியே வசிக்கும் ஓய்வூதியர்களுக்கு 13வது AHV ஓய்வூதியத் தொகையை வழங்குவதை நிறுத்த வேண்டும் என்ற புதிய அரசியல் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது இன்னும் சட்டமாகவில்லை.

தற்போதைய விதிகளின்படி வெளிநாட்டில் வசிக்கும் தகுதியான ஓய்வூதியர்களுக்கும் 13வது AHV வழங்கப்படும்.

SVP கட்சியைச் சேர்ந்த Neuchâtel நாடாளுமன்ற உறுப்பினர் Didier Calame, 13வது AHV தொகையை Switzerland-இல் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு மட்டும் வழங்குமாறு கோரி motion ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

### முன்மொழிவுக்கான காரணம் என்ன?

வெளிநாடுகளில் வாழும் பல ஓய்வூதியர்கள், Switzerland-ஐவிட வாழ்க்கைச் செலவு குறைந்த நாடுகளில் வசிப்பதால் அவர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் தேவையில்லை என்பது Didier Calame முன்வைக்கும் வாதமாகும்.

13வது AHV தொகையின் நோக்கம் Switzerland-இல் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதாக இருந்தது.

எனவே கிடைக்கக்கூடிய நிதியை நாட்டுக்குள் வசிக்கும் ஓய்வூதியர்களுக்கே பயன்படுத்த வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

13வது AHV வழங்குவதற்கு 2026ஆம் ஆண்டில் சுமார் CHF 4.2 பில்லியன் செலவாகும் என்றும், அடுத்த ஆண்டுகளில் வருடத்திற்கு சுமார் CHF 5 பில்லியன் வரை தேவைப்படலாம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிரந்தர நிதியமைப்பு தொடர்பான அரசியல் விவாதம் இன்னும் முடிவடையவில்லை.

### தற்போதைய விதி என்ன?

2026 முதல் தகுதியுள்ள முதியோர் AHV ஓய்வூதியர்களுக்கு ஆண்டுதோறும் 13வது தொகை வழங்கப்படுகிறது.

### தற்போதைய நடைமுறையின்படி:

Switzerland-இல் வசிப்பவர்களுக்கு மட்டுமல்லாமல், வெளிநாட்டில் வாழும் தகுதியுள்ள ஓய்வூதியர்களுக்கும் இது வழங்கப்படும்.

டிசம்பர் மாதத்தில் முதியோர் AHV ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ளவர்களே அந்த ஆண்டுக்கான 13வது தொகையைப் பெறுவார்கள்.

தொகை, அந்த ஆண்டில் வழங்கப்பட்ட முதியோர் ஓய்வூதியத்தின் பன்னிரண்டில் ஒரு பங்காகக் கணக்கிடப்படும்.

வெளிநாட்டில் வசிப்பது மட்டும் தற்போதைய உரிமையை நீக்குவதில்லை.

எனவே வெளிநாட்டில் வாழும் ஓய்வூதியர்களின் 2026 கொடுப்பனவு தற்போது ரத்து செய்யப்படவில்லை.

### வெளிநாடுகளுக்குச் செல்லும் AHV தொகை எவ்வளவு?

கிட்டத்தட்ட மூன்று AHV பெறுநர்களில் ஒருவர் வெளிநாட்டில் வசிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் மொத்த AHV ஓய்வூதியச் செலவில் வெளிநாடுகளுக்குச் செல்லும் தொகை சுமார் 14% மட்டுமே.

இதற்கு முக்கிய காரணம், வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் சராசரி ஓய்வூதியம் குறைவாக இருப்பதாகும்.

### 2025 தரவுகளின்படி:

Switzerland-இல் வழங்கப்பட்ட சராசரி மாதாந்திர AHV: சுமார் CHF 1,970

வெளிநாடுகளுக்கு வழங்கப்பட்ட சராசரி மாதாந்திர AHV: சுமார் CHF 702

வெளிநாடுகளுக்குச் செலுத்தப்படும் AHV ஓய்வூதியங்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு, Switzerland-இல் பணியாற்றிவிட்டு பின்னர் தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பிய முன்னாள் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்குச் செல்கிறது. எனவே இந்த முன்மொழிவு Swiss குடிமக்களை மட்டும் பாதிக்காது.

### Federal Council என்ன கூறுகிறது?

Didier Calame-இன் motion-ஐ நிராகரிக்குமாறு Federal Council பரிந்துரைத்துள்ளது.

### இதற்குக் குறிப்பிடப்படும் முக்கிய காரணங்கள்:

Swiss அரசியலமைப்பு அனைத்து தகுதியுள்ள முதியோர் ஓய்வூதியர்களுக்கும் 13வது AHV உரிமையை வழங்குகிறது.

Switzerland-EU சுதந்திர நடமாட்ட ஒப்பந்தத்தில் சமமான நடத்தல் என்ற கொள்கை உள்ளது.

பல நாடுகளுடன் Switzerland செய்துள்ள சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தங்களும் பாகுபாடற்ற கொடுப்பனவைக் கோருகின்றன.

வெளிநாட்டில் வசிப்பவர்களை மட்டும் வேறுபடுத்துவதற்கு தற்போதைய சட்டத்தில் இடமில்லை.

### எதிர்ப்பாளர்களின் வாதம்

Swiss Abroad அமைப்பு இந்த முன்மொழிவை நிராகரித்துள்ளது. வாழும் நாட்டை மாற்றியதால் ஒருவர் வாழ்நாள் முழுவதும் செலுத்திய AHV பங்களிப்பின் அடிப்படையிலான உரிமையை இழக்கக்கூடாது என்று அது கூறுகிறது.

மேலும் அனைத்து வெளிநாடுகளிலும் வாழ்க்கைச் செலவு குறைவாக இருப்பதில்லை. வெளிநாட்டில் வாழும் சில ஓய்வூதியர்கள் தனியார் மருத்துவக் காப்பீட்டிற்கும் சிகிச்சைகளுக்கும் அதிக தொகை செலுத்த வேண்டியிருப்பதாகவும் எதிர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### அடுத்து என்ன நடைபெறும்?

இது உடனடியாக அமலுக்கு வரும் முடிவு அல்ல. Motion முதலில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் ஏற்கப்பட வேண்டும். அதன் பின்னர் Federal Council சட்ட மாற்றத்தைத் தயாரிக்க வேண்டும். நாடாளுமன்றம் அதனை மீண்டும் அங்கீகரிக்க வேண்டியிருக்கும்; சட்டத்தின் தன்மையைப் பொறுத்து referendum ஏற்படும் வாய்ப்பும் இருக்கலாம்.

### முக்கிய விளக்கம்

வெளிநாட்டிலுள்ள ஓய்வூதியர்களுக்கான 13வது AHV தற்போது ரத்து செய்யப்படவில்லை. இது SVP நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் முன்வைக்கப்பட்ட அரசியல் கோரிக்கை மட்டுமே. Federal Council இதனை எதிர்க்கிறது.




# சுவிட்சர்லாந்து குடியுரிமை

# விண்ணப்பம் டிஜிட்டல் மயமாகிறது!

## விண்ணப்ப செயலாக்க காலம் குறைய வாய்ப்பு

சுவிட்சர்லாந்தில் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் நடைமுறையை விரைவுபடுத்தும் நோக்கில், 2026 ஆகஸ்ட் முதல் இயற்கைமயமாக்கல் (Naturalisation) செயல்முறையின் ஒரு பகுதியை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கையை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது.

இதுவரை குடியுரிமை விண்ணப்பங்கள் தொடர்பாக Canton அதிகாரிகளுக்கும், மத்திய அரசின் State Secretariat for Migration (SEM) அமைப்புக்கும் இடையே பெரும்பாலான ஆவணங்கள் தபால் மூலமாக பரிமாறப்பட்டன.

புதிய முறையின் கீழ், Canton அதிகாரிகள் பரிசீலித்த குடியுரிமை விண்ணப்பங்களை ZEMIS (Central Migration Information System) என்ற மத்திய குடியேற்ற தகவல் அமைப்பின் புதிய மின்னணு இணைப்பின் மூலம் SEM-க்கு அனுப்ப முடியும். அதேபோன்று, கூட்டாட்சி குடியுரிமை அனுமதியை வழங்குவது அல்லது மறுப்பது தொடர்பான SEM-ன் முடிவுகளும் மின்னணு முறையில் Canton அதிகாரிகளுக்கு அனுப்பப்படலாம்.

### தகுதிகளில் மாற்றம் இல்லை

இந்த டிஜிட்டல் மாற்றத்தால் குடியுரிமை பெறுவதற்கான அடிப்படை நிபந்தனைகள் மாற்றப்படவில்லை. C Permit, தேவையான குடியிருப்புக் காலம், மொழித் திறன், சமூக ஒருங்கிணைப்பு உள்ளிட்ட தற்போதைய விதிமுறைகள் தொடர்ந்து அமலில் இருக்கும். குற்றப் பதிவுச் சான்று, கடன் வசூல் பதிவுச் சான்று, அங்கீகரிக்கப்பட்ட மொழித் திறன் சான்றிதழ் மற்றும் சம்பந்தப்பட்ட Canton கோரும் ஏனைய ஆவணங்களையும் விண்ணப்பதாரர்கள் தொடர்ந்து சமர்ப்பிக்க வேண்டும்.

### காத்திருப்பு காலம் குறையுமா?

புதிய முறையின் முக்கிய நன்மை Canton மற்றும் SEM இடையிலான ஆவணப் பரிமாற்றத்தை விரைவுபடுத்துவது ஆகும். இதனால் நிர்வாகத் தாமதங்கள் குறைந்து, குடியுரிமை விண்ணப்பங்களின் மொத்த செயலாக்க காலமும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சிக்கலற்ற சாதாரண குடியுரிமை விண்ணப்பங்களுக்குக்கூட முழு நடைமுறை நீண்ட காலம் எடுக்கக்கூடும். புதிய டிஜிட்டல் முறையில் செயல்முறை வேகமடையும் என எதிர்பார்க்கப்பட்டாலும், புதிய உறுதியான காலக்கெடு எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. செயலாக்க நேரம் Canton-க்கு Canton மாறுபடலாம்.

### நாடு முழுவதும் பின்னர் கட்டாயம்

புதிய டிஜிட்டல் முறையின் முழுமையான தேசிய அமலாக்கத் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஆரம்பகட்ட நடைமுறையின் முடிவுகளைப் பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நாடு முழுவதும் அமலுக்கு வந்த பின்னர் அனைத்து Cantons-க்கும் இந்த மின்னணு நடைமுறை கட்டாயமாகும்.




# 50 ஆண்டுகளுக்கு முன் ஆகஸ்டிலேயே பனிப்பொழிவு

## 350 மாடுகள் முன்கூட்டியே மலையிலிருந்து இறக்கப்பட்டன

Switzerland-இல் 50 ஆண்டுகளுக்கு முன்பு, 1976 ஆகஸ்ட் மாத இறுதியில் ஏற்பட்ட திடீர் வெப்பநிலை வீழ்ச்சியால் உயரமான பகுதிகளில் பனிப்பொழிவு ஏற்பட்டது. இதன் காரணமாக Julierpass பகுதியில் மேய்ச்சலுக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்த சுமார் 350 மாடுகள் முன்கூட்டியே பள்ளத்தாக்குகளுக்கு இறக்கப்பட்டன.

### கடும் வெப்பத்துக்குப் பின்னர் திடீர் பனி

1976 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் Switzerland கடுமையான வெப்ப அலையை எதிர்கொண்டது. ஆனால் ஆகஸ்ட் மாதத்தில் நிலைமை திடீரென மாறி, உயரமான பகுதிகளில் வெப்பநிலை பெருமளவில் குறைந்ததுடன் பனிப்பொழிவும் பதிவானது. இதனால் வழக்கமான Alps மேய்ச்சல் காலம் முடிவடைவதற்கு முன்னரே சில பகுதிகளில் கால்நடைகளை கீழே கொண்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டது.

### 50 ஆண்டுகளுக்குப் பிறகு வேறு ஒரு பிரச்சினை

2026-இலும் Swiss Alps கால்நடை வளர்ப்புத் துறை சவாலை எதிர்கொள்கிறது. ஆனால் இம்முறை காரணம் பனி அல்ல - வறட்சியும் தண்ணீர் மற்றும் கால்நடைத் தீவனப் பற்றாக்குறையும்.

Schweizerischer Alpwirtschaftlicher Verband (SAV) தகவலின்படி, ஏற்கனவே ஆகஸ்ட் நடுப்பகுதியில் சில பண்ணைகள் தங்களது கால்நடைகளை Alps பகுதிகளிலிருந்து

முன்கூட்டியே கீழே கொண்டு வந்துள்ளன.

குறிப்பாக Jura பகுதி, மேற்கு Switzerland மற்றும் கிழக்கு Switzerland-இன் சில பகுதிகள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள குடிநீர் மற்றும் மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாப்பதற்காக பல பண்ணைகள் தங்களது கால்நடைகளில் ஒரு பகுதியை முன்கூட்டியே பள்ளத்தாக்குகளுக்கு அனுப்பியுள்ளன.

### 6,600 Alpine பண்ணைகள்

SAV தகவலின்படி Switzerland-இல் சுமார் 6,600 Alpine பண்ணைகள் உள்ளன. கோடைகாலத்தில் நாட்டின் விவசாயப் பயன்பாட்டு நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பகுதியை இவை பயன்படுத்துகின்றன.

மேலும் ஆண்டுதோறும் சுமார் 5,500 தொன் Alpkäse - Alpine cheese உற்பத்தி செய்யப்படுகிறது.

பொதுவாக கால்நடைகளை Alps பகுதிகளிலிருந்து அலங்கரித்து கீழே அழைத்து வரும் பாரம்பரியமான Alpabzug நிகழ்வுகள் பிராந்தியத்தைப் பொறுத்து ஆகஸ்ட் நடுப்பகுதியிலிருந்து செப்டம்பர் இறுதி வரை நடைபெறுகின்றன.

### UNESCO கலாசார பாரம்பரியம்

2023 இறுதியில் Switzerland-இன் Alpsaison பாரம்பரியத்தை UNESCO மனிதகுலத்தின் அருவமான கலாசார பாரம்பரியப் பட்டியலில் இணைத்தது.

கால்நடைகளை மலைக்கு அழைத்துச் செல்வது மற்றும் மீண்டும் கீழே கொண்டுவருவது, Alpine மேய்ச்சல் அறிவு, சீஸ் தயாரித்தல், பாரம்பரிய கைவினை மற்றும் பாடல்கள் உள்ளிட்ட பல தலைமுறைகளாகத் தொடரும் மரபுகள் இதில் அடங்குகின்றன.

# Germany-யில் குப்பைகளை கொட்டும் Swiss வாகன ஓட்டிகள்



Switzerland எல்லையைத் தாண்டி Germany-க்கு பொருட்கள் வாங்கச் செல்லும் Swiss வாடிக்கையாளர்களை அங்குள்ள வர்த்தகர்கள் வரவேற்றாலும், தற்போது உருவாகியுள்ள 'குப்பை சுற்றுலா' (Waste Tourism) சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

Basel அருகிலுள்ள Germany-யின் Lörrach மாவட்டத்தில், Swiss இலக்கத் தகடுகளைக் கொண்ட வாகனங்களில் வருபவர்கள் உள்ளூர் Recycling Centre-களில் அனுமதியின்றி குப்பைகளை விட்டுச் செல்வதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் வசிக்காதவர்கள் Recycling Centre-களைப் பயன்படுத்துவது விதிமீறலாகும்; இதற்கு அபராதம் விதிக்கப்படலாம்.

தற்போது அதிகாரிகள் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கு கின்றனர்.

ஆனால் இது தொடர்ந்தால், Switzerland திரும்பும் வாகன ஓட்டிகள் தொடர்பாக சுங்க அதிகாரிகளின் உதவியையும் நாடலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது




Zürich மாகாணத்தில் Spitex பராமரிப்பு சேவைகளுக்கான செலவுகள் அதிகரித்து வரும் நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்த புதிய செலவு உச்சவரம்புகளை சுகாதார இயக்குநர் Natalie Rickli முன்மொழிந்துள்ளார்.

சுவிஸ் ஊடகங்களில் வெளிவந்த தகவலின்படி, Spitex நிறுவனங்கள் அரசால் அங்கீகரிக்கப்படும் செலவுக் கணக்குகளில் சேர்க்கக்கூடிய சம்பளம், வாகனம் மற்றும் விளம்பரச் செலவுகளுக்கு புதிய வரம்புகள் கொண்டுவரப்படலாம்.

### என்னென்ன கட்டுப்பாடுகள்?

முன்மொழிவின்படி, ஊழியர்களின் ஆண்டுச் சம்பளத்தில் CHF 160,000-க்கு மேற்பட்ட தொகை அங்கீகரிக்கப்பட்ட செலவாக கணக்கிடப்படக்கூடாது.

அதேபோல் வாகனச் செலவுக்கு CHF 30,000 என்ற வரம்பும், விளம்பரச் செலவுக்கு நிறுவனத்தின் வருமானத்தில் அதிகபட்சம் 1% என்ற வரம்பும் முன்மொழியப்பட்டுள்ளது.

### உறவினர்களைப் பராமரிப்போருக்கு மணிக்கு CHF 32

வீட்டிலேயே தங்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவினர்களைப் பராமரித்து, Spitex அமைப்புகள் மூலம் ஊதியம் பெறுபவர்களுக்கும் புதிய விதி முக்கியமானதாக அமையலாம்.

அவர்களுக்கான அங்கீகரிக்கப்படும் ஊதியத்தை மணிக்கு அதிகபட்சம் CHF 32 ஆக நிர்ணயிக்க வேண்டும் என்பது Natalie Rickli-யின் முன்மொழிவுகளில் ஒன்றாகும்.

### செலவுகள் அதிகரிப்பதே காரணம்

Zürich மாகாணத்தின் கூற்றுப்படி, பராமரிப்புத் துறையின் செலவுகள் அண்மைக்காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன. அத்துடன் தற்போதுள்ள கணக்கியல் விதிமுறைகள் மீறப்பட்ட சம்பவங்களும் கட்டுப்பாடுகளை கடுமையாக்குவதற்கான காரணங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் ஜூலை மாதத்தில் கருத்துக் கேட்புக்கு அனுப்பப்பட்ட திருத்தப்பட்ட Pflegeversorgung விதிமுறைகளின் ஒரு பகுதியாகும்.

### தனியார் Spitex அமைப்புகள் கடும் விமர்சனம்

தனியார் Spitex நிறுவனங்களின் சங்கத்தைச் சேர்ந்த Katharina Hadorn, Zürich மாகாணத்தின் இந்த முன்மொழிவை விமர்சித்துள்ளார். இது தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு பயனுள்ள தீர்வை வழங்காது என்பதே அவர்களின் நிலைப்பாடு.

முக்கியமாக, இவை இன்னும் முன்மொழிவுகள் மட்டுமே. தற்போது அமலில் உள்ள புதிய கட்டுப்பாடுகளாக இதனைப் புரிந்துகொள்ளக்கூடாது.




# Switzerland-இல் அதிகம் காணப்படும் குடும்பப் பெயர் எது?

## முதலிடத்தில் தொடரும் Mller

Switzerland-இல் 2025ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட அரை மில்லியன் வெவ்வேறு குடும்பப் பெயர்கள் பதிவாகியுள்ள நிலையில், நாட்டில் அதிகம் பயன்படுத்தப்படும் குடும்பப் பெயர்களின் பட்டியல் வெளியாகியுள்ளது. பல ஆண்டுகளாக முதலிடத்தில் இருக்கும் Müller பெயரே 2025-லும் தனது முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

### 52,674 பேரின் குடும்பப் பெயர் Müller

2025 தரவுகளின்படி Switzerland முழுவதும் 52,674 பேர் Müller என்ற குடும்பப் பெயரைக் கொண்டுள்ளனர். அடுத்தடுத்த இடங்களில் Meier - 32,284 பேர் மற்றும் Schmid - 30,134 பேர் உள்ளனர். Müller என்பது ஜேர்மன் மொழியில் "மாவு அரைப்பவர் / Miller" என்ற தொழிலைக் குறிக்கும் பெயராகும். Meier என்பது நில நிர்வாகி அல்லது விவசாயி என்ற பின்னணியிலிருந்தும், Schmid/Schmied/Schmidt என்பது கொல்லர் தொழிலிலிருந்தும் உருவான குடும்பப் பெயர்களாகக் கூறப்படுகிறது.

### மொழிப் பகுதிகளுக்கு ஏற்ப பெயர்களும் மாறுகின்றன

German-speaking Switzerland: Müller - 48,697; Meier - 30,827; Schmid - 28,028.

French-speaking Switzerland: da Silva - 10,390; Ferreira - 7,365; Pereira - 6,814.

Italian-speaking Switzerland: Bernasconi - 2,196; Ferrari - 1,321; Rossi - 1,315.

Romansh-speaking Switzerland: Derungs - 229; Caduff - 217; Casanova - 188.

குறிப்பாக French-speaking Switzerland-இல் Portuguese வம்சாவளியைச் சேர்ந்த குடும்பப் பெயர்கள் அதிகமாக இடம்பெறுவது, Switzerland-இன் சர்வதேச மக்கள் அமைப்பையும் பிரதிபலிக்கிறது.

### ஒரே கிராமத்தில் கிட்டத்தட்ட 80% பேருக்கு ஒரே குடும்பப் பெயர்

Switzerland முழுவதையும் எடுத்துக்கொண்டால் Müller குடும்பப் பெயர் கொண்டவர்கள் மொத்த மக்கள்தொகையில் சுமார் 0.6% மட்டுமே.

ஆனால் Bern மாகாணத்தின் Rebévelier நகராட்சியில் நிலைமை மிகவும் வித்தியாசமானது.

அங்கு 29 குடியிருப்பாளர்களில் 23 பேர் ஒரே குடும்பப் பெயரைக் கொண்டுள்ளனர் – 79.3%!

### Switzerland-இன் Top 10 குடும்பப் பெயர்கள் - 2025

Müller - 52,674

Meier - 32,284

Schmid - 30,134

Keller - 22,897

Weber - 19,956

Schneider - 18,938

Huber - 17,883

da Silva - 17,447

Meyer - 17,253

Steiner - 17,109

# Zuerich விமான நிலையம் புதிய சாதனை - 6 மாதங்களில் கிட்டத்தட்ட 16 மில்லியன் பயணிகள்




Zürich விமான நிலையம் தனது வரலாற்றிலேயே அதிக பயணிகள் பயணித்த முதல் அரையாண்டைப் பதிவு செய்துள்ளது.

அதேவேளை அதிகரித்து வரும் விமானப் பயணங்களின் காலநிலை தாக்கம் குறித்த விமர்ச னங்களும் எழுந்துள்ளன.

2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கிட்டத்தட்ட 16 மில்லியன் பயணிகள் Zürich-Kloten விமான நிலையத்தைப் பயன்படுத்தியுள்ளனர். இது கடந்த ஆண்டின் இதே கால ப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 6 சதவீத அதிகரிப்பாகும்.

இதன் மூலம் Zürich விமான நிலையத்தின் வரலாற்றில் பயணிகள் எண்ணிக்கையைப் பொறுத்தவரை மிகச் சிறந்த முதல் அரையாண்டாக 2026 பதிவாகியுள்ளது. வருமானமும் இலாபமும் அதிகரி த்துள்ளதாக விமான நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.




# குடும்பங்களுடன் வாழ Switzerland இல் சிறந்த இடங்கள் எவை? - UBS 2026 ஆய்வு

Switzerland முழுவதும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் காணப்பட்டாலும், குடும்பங்கள் வசிப்பதற்கு சில நகரங்கள் மற்ற இடங்களைவிட சிறந்த வாய்ப்புகளை வழங்குகின்றன என்று UBS வெளியிட்டுள்ள Residential Attractiveness Indicator 2026 ஆய்வு தெரிவிக்கிறது.

இரண்டு குழந்தைகளைக் கொண்ட சராசரி வருமானம் பெறும் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு, உள்கட்டமைப்பு, போக்குவரத்து வசதி, கல்வி மற்றும் குழந்தைப் பராமரிப்பு, கடைகள், பொழுதுபோக்கு வாய்ப்புகள், வாழ்க்கைத் தரம் மற்றும் வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## நடுத்தர நகரங்களுக்கு முன்னிலை

பெரிய நகரங்களைவிட நடுத்தர அளவிலான நகரங்கள் பல குடும்பங்களுக்கு சிறந்த சமநிலையை வழங்குகின்றன என்பது ஆய்வின் முக்கிய முடிவாகும். சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் கிடைப்பதுடன், பெரிய நகரங்களுடன் ஒப்பிடும்போது வாழ்க்கைச் செலவும் குறைவாக இருப்பது இதற்குக் காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணமாக, Vevey-யில் Geneva-வை விட சுமார் 15% குறைவாகவும், Aarau-வில் Zurich-ஐ விட 28% குறைவாகவும், Schaffhausen-ல் Zurich-ஐ விட 34% குறைவாகவும் செலவுகள் இருப்பதாக ஆய்வு தெரிவிக்கிறது.

## முன்னிலை வகிக்கும் நகரங்கள்

தத்தமது பிராந்தியங்களில் Solothurn, Fribourg, Sion, Basel, Lucerne, Aarau, Chur, St. Gallen, Vevey மற்றும் Lugano ஆகியவை குடும்பங்கள் வாழ மிகவும் கவர்ச்சிகரமான இடங்களாக UBS ஆய்வில் முன்னிலை பெற்றுள்ளன.

Zurich பிராந்தியத்தில் Aarau, Baden மற்றும் Schaffhausen, Lake Geneva பகுதியில் Vevey, Lausanne மற்றும் Morges, Central Switzerland பகுதியில் Lucerne, Schwyz மற்றும் Zug ஆகியவை சிறந்த இடங்களாகத் தெரிவாகியுள்ளன.

## வெளிநாட்டுக் குடும்பங்களுக்கும் பொருந்தும்

இந்த ஆய்வில் Swiss மற்றும் வெளிநாட்டவர்கள் என்று தனித்தனியாக வகைப்படுத்தப்படவில்லை. எனவே Switzerland இல் வசிக்கும் அல்லது குடியேறத் திட்டமிடும் வெளிநாட்டுக் குடும்பங்களுக்கும் இந்தத் தகவல்கள் பயனுள்ள வழிகாட்டியாக அமையலாம்.




# வாகன உரிமையாளர்களின் தரவுகள் பெருமளவில் பெறப்பட்டன

## மோசடி அபாயம்!

Switzerland-ன் Aargau, Luzern, Schaffhausen, Vaud மற்றும் Zug Kantons-களில் வாகன உரிமையாளர்களின் பொதுவாக அணுகக்கூடிய தகவல்கள் eAutoIndex இணையத் தளத்திலிருந்து தானியங்கி முறையில் பெருமளவில் பெறப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஆகஸ்ட் மாதத்தின் நடுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. வாகன இலக்கத் தகடு, உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி போன்ற தகவல்கள் இதில் அடங்குகின்றன.

### மோசடிக்குப் பயன்படுத்தப்படலாம்

தொழில்நுட்ப இடைமுகம் ஒன்றின் ஊடாக பெருமளவு தகவல்கள் சேகரிக்கப்பட்டிருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தரவுகளைப் பயன்படுத்தி வாகன உரிமையாளர்களுக்கு போலியான அபராதக் கட்டணங்கள் அல்லது வெளிநாட்டு Toll கட்டணங்கள் இருப்பதாகக் கூறி பணம் கோரும் மோசடிகள் மேற்கொள்ளப்படலாம் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தங்களது வாகன உரிமையாளர் தகவல்களை பொதுமக்கள் பார்வையிட முடியாதவாறு ஏற்கனவே தடை செய்திருந்தவர்களின் தரவுகள் இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்படவில்லை.

### மிரட்டிப் பணம் பறிக்கவும் முயற்சி

eAutoIndex நிறுவனத்தையும் Vaud Kanton-ஐயும் இலக்காகக் கொண்டு மிரட்டிப் பணம் பறிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஐந்து Kantons-களும் இது தொடர்பாக புகார் அளித்துள்ளன அல்லது அளிக்கவுள்ளன.

பொதுமக்கள் தங்களுக்கு அறிமுகமில்லாத அபராதம் அல்லது Toll கட்டணம் தொடர்பான கடிதம், SMS அல்லது மின்னஞ்சல் கிடைத்தால், பணம் செலுத்துவதற்கு முன் அதிகாரப்பூர்வமாக சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்




# நவம்பர் முதல் Switzerland-இல் புதிய Biometric அடையாள அட்டை

Switzerland அரசு புதிய Biometric அடையாள அட்டையை (Biometric ID Card) அறிமுகப்படுத்துவதற்கான சட்ட அடிப்படையை அங்கீகரித்துள்ளது. 2026 நவம்பர் 2 முதல், விரும்பும் Swiss குடிமக்கள் இந்தப் புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும்.

புதிய அட்டையில், தற்போதைய Swiss biometric passport போலவே ஒரு மின்னணு Chip பொருத்தப்படும். அதில் அட்டைதாரரின் முகப்படம் மற்றும் இரண்டு விரல்களின் கைரேகைகள் சேமிக்கப்படும். இதன்மூலம் அடையாள அட்டை மோசடி மற்றும் தவறான பயன்பாட்டுக்கு எதிரான பாதுகாப்பு அதிகரிக்கும்.

### ஐரோப்பிய பயணத்திற்கு முக்கியத்துவம்

2021 முதல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக biometric அடையாள அட்டைகளை வழங்கி வருகின்றன. புதிய Swiss biometric ID, எதிர்காலத்திலும் Swiss குடிமக்கள் EU நாடுகளுக்குள் எளிதாகப் பயணிப்பதை உறுதிப்படுத்த உதவும் என Fedpol தெரிவித்துள்ளது.

ஆனால் தற்போது வைத்திருக்கும் non-biometric Swiss ID அட்டைகளை உடனடியாக மாற்ற வேண்டிய அவசியமில்லை.

அவை காலாவதியாகும் வரை EU நாடுகளுக்கான பயணங்களிலும் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

எதிர்காலத்திலும் Swiss குடிமக்கள் biometric அல்லது non-biometric ID ஆகிய இரண்டில் தங்களுக்கு தேவையானதைத் தேர்வு செய்ய முடியும். EU நாடுகளுக்கு அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு biometric ID பரிந்துரைக்கப்படுகிறது; Switzerland-க்குள் அடையாள ஆவணமாக மட்டும் பயன்படுத்துபவர்களுக்கு வழக்கமான non-biometric ID போதுமானது.

### Biometric ID மற்றும் e-ID ஒன்றா?

இல்லை. Biometric ID என்பது உத்தியோகபூர்வ அடையாள மற்றும் பயண ஆவணம். எதிர்காலத்தில் அறிமுகமாகவுள்ள e-ID இணையத்தில் ஒருவரின் அடையாளத்தை நிரூபிக்கப் பயன்படும் டிஜிட்டல் வசதி; அதை பயண ஆவணமாகப் பயன்படுத்த முடியாது.

புதிய biometric ID-க்கு Swiss குடிமக்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை கொண்ட Swiss குடிமக்கள் தங்களது மாகாண Passport Office வழியாக விண்ணப்பிக்க முடியும்.




# September 2026 - Switzerland

# முழுவதும் களைகட்டும் விழாக்கள்!

கோடைக்காலம் முடிந்து இலையுதிர் காலம் தொடங்கும் செப்டம்பர் மாதத்தில் Switzerland முழுவதும் பாரம்பரியம், விளையாட்டு, இசை, திராட்சை அறுவடை மற்றும் மலைப்பகுதி விழாக்கள் நடைபெறவுள்ளன.

செப்டம்பர் 2-6 - Geneva Watch Days: உலகப் புகழ்பெற்ற கடிகாரத் தயாரிப்பாளர்களுடன் சுயாதீன கடிகாரக் கலைஞர்களும் தங்கள் புதிய படைப்புகளை Geneva-வில் காட்சிப்படுத்துகின்றனர். வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணங்கள் மற்றும் நிபுணர் கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

செப்டம்பர் 5 - Kilchberger Schwinget, Zürich: Switzerland-இன் பாரம்பரிய மல்யுத்தமான Schwingen போட்டியை நேரில் காணக்கூடிய முக்கிய நிகழ்வு. செப்டம்பர் 12-14 - Knabenschiessen, Zürich: 17ஆம் நூற்றாண்டிலிருந்து தொடரும் பாரம்பரிய துப்பாக்கிச் சுடுதல் விழா. 1991 முதல் சிறுமிகளும் இதில் பங்கேற்கின்றனர்.

செப்டம்பர் 12 - Alphorn Festival, Gruyère: வரலாற்றுச் சிறப்புமிக்க Gruyère கிராமத்தில் Alphorn இசையும் பாரம்பரிய கொடி சுழற்றும் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

செப்டம்பர் 13 - Sportissima, Ticino: Bellinzona, Lugano, Mendrisio உள்ளிட்ட பல இடங்களில் இலவச விளையாட்டு நிகழ்ச்சிகள். Football, volleyball, sailing, stand-up paddling உள்ளிட்ட பல செயல்பாடுகளை முயற்சிக்கலாம்.

செப்டம்பர் 25-27 - Lutry திராட்சை அறுவடை விழா: Vaud-இன் Lavaux திராட்சைத் தோட்டப் பகுதியில் மூன்று நாள் கொண்டாட்டம். இசை நிகழ்ச்சிகள், உள்ளூர் அமைப்புகளின் wine cellars, உணவு மற்றும் பானக் கடைகள், ஞாயிற்றுக்கிழமை மாணவர்களின் பாரம்பரிய ஊர்வலம் ஆகியவை இடம்பெறும்.

செப்டம்பர் 26 - Lausanne Museum Night: 25வது ஆண்டு நிகழ்வாக Lausanne பிராந்தியத்தில் 29 அருங்காட்சியகங்கள், கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒரே இரவில் அனுபவிக்க வாய்ப்பு கிடைக்கும்.

செப்டம்பரின் மற்றொரு சிறப்பு Alpabzug - கோடைக்காலத்தை மலை மேய்ச்சல் நிலங்களில் கழித்த மாடுகள், ஆடுகள் பள்ளத்தாக்குகளுக்குத் திரும்பும் பாரம்பரிய நிகழ்வு. மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பெரிய மணிகளுடன் வரும் கால்நடைகளை Gstaad (5), Müstair (12), Emmental (18), Urnäsch (19), Charmey (26) உள்ளிட்ட இடங்களில் காணலாம்.

மேலும், மிதமான காலநிலை காரணமாக Hiking செய்வதற்கும் செப்டம்பர் சிறந்த மாதமாகும். பல பகுதிகளில் பாரம்பரிய Cheese Markets நடைபெறுவதால் உள்ளூர் பாலாடைக்கட்டிகளையும் சுவைக்கலாம்.




# வயதான வாகன ஓட்டுநர்களுக்கு கடுமையான விதிகள்? Switzerland-ல் புதிய விவாதம்

Switzerland-ல் வயதானவர்கள் வாகனம் ஓட்டுவதற்கான விதிகளை மேலும் கடுமையாக்க வேண்டுமா என்ற விவாதம் மீண்டும் எழுந்துள்ளது.

Green Party நாடாளுமன்ற உறுப்பினர் Marionna Schlatter, தற்போதைய விதிகளை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசிடம் கோரியுள்ளார். 2025-ல் 18-24 வயதுடைய இளம் ஓட்டுநர்களைவிட 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிக விபத்துகளை ஏற்படுத்தியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது Switzerland-ல் வாகன ஓட்டுநர்கள் 75 வயதிலிருந்து மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட வேண்டும். வயது அதிகரிக்கும்போது பார்வைத்திறன் மற்றும் அறிவாற்றல் குறைபாடுகள் அதிகரிக்கக்கூடும் என்பதால், இரவு நேரத்தில் அல்லது Motorway-களில் வாகனம் ஓட்டுவதற்கு வயதின் அடிப்படையில் கட்டுப்பாடுகள் கொண்டுவர முடியுமா என்பதும் முன்மொழிவுகளில் ஒன்றாக உள்ளது.

ஆனால் மத்திய போக்குவரத்துத் துறை, தற்போது புதிய கடுமையான விதிகள் தேவையில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ஏற்கனவே கன்டோன்கள் தேவைக்கேற்ப பகல் நேரத்தில் மட்டும் வாகனம் ஓட்டுதல், குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் ஓட்டுதல் அல்லது சில வகை சாலைகளில் மட்டும் அனுமதித்தல் போன்ற கட்டுப்பாடுகளை விதிக்க முடியும் என்று அரசு தெரிவித்துள்ளது.

Switzerland-ல் தற்போது 75 வயதுக்கு மேற்பட்ட சுமார் 538,000 பேர் ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளனர். 2025-ல் மருத்துவப் பரிசோதனையில் தகுதி பெறாததால் 4,239 பேர் தங்கள் ஓட்டுநர் உரிமத்தை ஒப்படைக்க வேண்டியிருந்தது.

இந்த விவகாரம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. Marionna Schlatter-ன் முன்மொழிவு எதிர்வரும் காலத்தில் National Council-ல் வாக்கெடுப்புக்கு வரவுள்ளது.




# சூரிச் நகரில் தவறாக நிறுத்தப்படும் E-Trotti-களுக்கு நடவடிக்கை

சூரிச் நகரில் நடைபாதைகள், வீட்டு நுழைவாயில்கள் மற்றும் பொது போக்குவரத்து நிறுத்தங்களுக்கு அருகில் முறையற்ற வகையில் நிறுத்தப்படும் E-Trotti / E-Scooter வாகனங்கள் தொடர்பாக நகர சபையில் கடும் விவாதம் நடைபெற்றுள்ளது.

குறிப்பாக சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்கள், பார்வைக் குறைபாடு மற்றும் நடமாட்டக் குறைபாடு உள்ளவர்களுக்கு இவ்வாறு நிறுத்தப்படும் E-Trotti-கள் தடையாக மட்டுமல்லாமல் விபத்து அபாயமாகவும் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

SP மற்றும் பசுமைக் கட்சி, நகரம் முழுவதும் வாடகை E-Trotti மற்றும் வாகனங்களை குறிப்பிட்ட நிரந்தர இடங்களில் மட்டுமே நிறுத்த வேண்டும் என வலியுறுத்தின. ஆனால் இந்த முன்மொழிவுக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை.

அதேவேளை, தவறாக நிறுத்தப்பட்ட வாடகை வாகனங்களை நகர சேவை உடனடியாக அகற்ற வேண்டும்; அதற்கான முழுச் செலவையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்ற முன்மொழிவு அடுத்தகட்ட பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் E-Trotti நிறுவனங்கள் வாகனங்களின் பயண மற்றும் பயன்பாட்டுத் தரவுகளை நகர நிர்வாகத்துக்கு வழங்க வேண்டும் என்ற மற்றொரு முன்மொழிவும் 104-16 வாக்குகளால் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

அதே நகர சபைக் கூட்டத்தில், நகரத்துக்குச் சொந்தமான விளம்பர இடங்களில் விமானப் பயண விளம்பரங்களைத் தடை செய்யும் பசுமைக் கட்சியின் முன்மொழிவு 61-57 வாக்குகளால் நிராகரிக்கப்பட்டது.




# Switzerland-ல் படிக்கும் வெளிநாட்டு மாணவர்கள் படிப்பு முடிந்ததும் தங்க முடியுமா?

Switzerland பல்கலைக்கழகங்களில் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 2025/26 கல்வியாண்டில் சுமார் 61,890 வெளிநாட்டு மாணவர்கள் Swiss பல்கலைக்கழகங்களில் பயின்றுள்ளனர். இது மொத்த மாணவர் எண்ணிக்கையில் சுமார் 35.1% ஆகும்.

ETH Zürich மற்றும் EPFL Lausanne ஆகியவற்றில் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பாக அதிகமாக உள்ளது. ஆனால் படிப்பு முடிந்ததும் Switzerland-ல் தொடர்ந்து தங்கி வேலை செய்ய முடியுமா என்பது முக்கியமாக மாணவரின் குடியுரிமையைப் பொறுத்தது.

**EU / EFTA மாணவர்களுக்கு**

EU நாடுகள் மற்றும் Norway, Iceland, Liech-tenstein போன்ற EFTA நாடுகளைச் சேர்ந்த பட்டதாரிகள், படிப்பை முடித்த பின்னர் 90 நாட்கள் வரை Switzerland-ல் தங்கி வேலை தேடலாம் என்று வழங்கப்பட்ட செய்தி கூறுகிறது.

இந்தக் காலத்திற்குள் வேலை கிடைத்தால், வேலை ஒப்பந்தத்துடன் தாங்கள் வசிக்கும் Gemeinde/Commune-இல் பதிவு செய்து வேலை மற்றும் குடியிருப்பு அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**EU/EFTA அல்லாத நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு**

இவர்களுக்கு விதிமுறைகள் கடுமையானவை. இருப்பினும் Swiss பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு ஒரு முக்கிய வாய்ப்பு உள்ளது.

Swiss Federal Act on Foreign Nationals விதிகளின்படி, Swiss பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற வெளிநாட்டவரின் வேலை “உயர் கல்விசார் அல்லது பொருளாதார முக்கியத்துவம்” கொண்டதாக இருந்தால் அனுமதி வழங்கப்படலாம்.

மேலும் படிப்பை முடித்த பின்னர் அதிகபட்சம் 6 மாதங்கள் Switzerland-ல்

தங்கி பொருத்தமான வேலை தேடுவதற்கான வாய்ப்பு இருக்கலாம்.

இந்த ஆறு மாத காலத்திற்காக, படிப்பு முடிந்ததை உறுதிப்படுத்தும் பல்கலைக்கழகக் கடிதம், தங்குமிடம் மற்றும் அரச சமூக உதவியைச் சார்ந்திருக்காமல் வாழ்வதற்கான போதுமான நிதி ஆதாரம் போன்றவற்றை நிரூபிக்க வேண்டும்.

**6 மாதங்களுக்குள் வேலை கிடைக்காவிட்டால்?**

இந்த வகையான தற்காலிக அனுமதியை புதுப்பிக்க முடியாது என்று வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடுகிறது. எனவே தகுதியான நிரந்தர வேலை கிடைக்காவிட்டால் 6 மாதங்களின் பின்னர் Switzerland-ஐ விட்டு வெளியேற வேண்டியிருக்கும்.

அதேவேளை, Swiss அல்லது EU/EFTA தொழிலாளர்களால் நிரப்ப முடியாத, தகுதியான நிபுணர்கள் பற்றாக்குறை உள்ள துறைகளில் ஒருவரின் திறமை தேவைப்படுவது போன்ற அம்சங்கள் முக்கியமாகக் கருதப்படலாம்.

# சூரிச் Sihlcity கூரையில் 43 சொகுசு வீடுகள் - UBS புதிய திட்டம்




சூரிச் Wiedikon பகுதியில் உள்ள Sihlcity வணிக வளாகத்தின் கூரையில் 43 புதிய உயர்தர வாடகை வீடுகளை அமைக்க UBS திட்டமிட்டுள்ளது. இதற்காக தற்போதைய கட்டிடத்தின் மேல் மேலும் இரண்டு மாடிகள் அமைக்கப்படவுள்ளன.

UBS-ன் Swiss Real Estate Fund முன்வைத்துள்ள திட்டத்தின்படி, பெரும்பாலான வீடுகள் 3.5 அறைகள் கொண்டதாகவும், சுமார் 54 முதல் 146 சதுர மீட்டர் பரப்பளவிலும் அமையும். இவை சாதாரண வாடகை வீடுகளைவிட உயர்ந்த விலைப் பிரிவில் இருக்கும் என UBS தெரிவித்துள்ளது.

வீடுகளில் ஒரு பகுதியினருக்கு தனிப்பட்ட பசுமையான உள் முற்றம், மற்றவர்களுக்கு தனி rooftop garden வழங்கப்படும். குடியிருப்பாளர்களுக்காக மட்டும் பயன்படுத்தக்கூடிய ஒரு "Piazza" பகுதியும் திட்டமிடப்பட்டுள்ளது.

Sihlcity வளாகத்திலுள்ள ஹோட்டலும் மேலும் 16 Apartments மூலம் விரிவுபடுத்தப்பட உள்ளது. திட்டமிட்டபடி கட்டுமானம் 2028இல் ஆரம்பிக்கப்பட்டாலும், Sihlcity வழக்கம்போல் தொடர்ந்து இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ட்ரோன் போருக்கு தயாராகும் Switzerland கேமர்களை தேடும் இராணுவம்

நவீன போர்களில் ட்ரோன்கள் மற்றும் ரோபோ தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், Switzerland இராணுவம் தனது ட்ரோன் திறனை பெருமளவில் மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக புதிய ட்ரோன் திறன் மையம் (Drohnen-Kompetenzzentrum) ஒன்றை உருவாக்க பாதுகாப்புத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

**கேமர்களின் திறனை பயன்படுத்த திட்டம்**

ட்ரோன்களை இயக்குவதற்கு தேவையான டிஜிட்டல் திறன்கள் இளம் தலைமுறையினரிடம் ஏற்கனவே இருப்பதாக இராணுவம் கருதுகிறது. குறிப்பாக வீடியோ கேம்களில் அனுபவமுள்ளவர்களின் டிஜிட்டல் திறன்களை இராணுவப் பயிற்சிக்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஆராயப்படுகின்றன.

இராணுவத் தலைவர் Benedikt Roos, பொதுமக்களிடையே இருக்கும் இத்தகைய திறன்களை சிறப்பாகப் பயன்படுத்த விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

**2027ல் முதல் ட்ரோன் Recruit School**

Thun இராணுவப் பயிற்சி மையத்தில் தற்போது ட்ரோன் விமானிகளுக்கான விரைவுப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

2027ஆம் ஆண்டு முதல் முறையாக தனியான ட்ரோன் Rekrutenschule (RS) ஆரம்பிக்கப்பட உள்ளது. மேலும் 2028க்குள் தனியான ட்ரோன் படைப்பிரிவை (Drohnen-bataillon) உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆய்வகத்திலிருந்து இராணுவத்திற்கு விரைவாக**

Ukraine போர், ட்ரோன் தொழில்நுட்பம் எவ்வளவு வேகமாக மாறுகிறது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. புதிய தொழில்நுட்பத்தை உருவாக்குவது மட்டும் போதாது; எதிரியின் நடவடிக்கைக்கு ஏற்ப அதை விரைவாக மாற்றுவதும்

முக்கியம் என Switzerland ஆயுதத் துறை கருதுகிறது.

இதனால் புதிய மையத்தில் இராணுவம், தொழில்துறை, அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகள் இணைந்து செயல்பட உள்ளனர்.

இதன் மூலம் புதிய தொழில்நுட்பங்களை ஆய்வகத்திலிருந்து நேரடியாக இராணுவப் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் காலத்தை குறைக்க முடியும்.

**ட்ரோன் பாதுகாப்பிலும் மாற்றம்**

தற்போது சந்தேகத்திற்குரிய ட்ரோன்களை எதிர்கொள்வதில் பெரும்பாலும் மாநில காவல்துறைகளே பொறுப்பு வகிக்கின்றன.

இராணுவப் பகுதிக்கு மேல் சந்தேகத்திற்குரிய ட்ரோன் பறந்தாலும், சில சூழ்நிலைகளில் இராணுவம் நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் காவல்துறையை தொடர்புகொள்ள வேண்டியுள்ளது.

Meiringen விமானப்படைத் தளத்தைச் சுற்றியும் அண்மையில் பல சந்தேகத்திற்குரிய ட்ரோன்கள் காணப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனால் தற்போதைய சட்ட விதிகளை மறுபரிசீலனை செய்து, இராணுவம் மற்றும் காவல்துறையின் பொறுப்புகளை தெளிவுபடுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செலவு இன்னும் தெரியவில்லை

புதிய ட்ரோன் மையம் எங்கு அமைக்கப்படும், அதில் யார் பணியாற்றுவார்கள், அதன் மொத்த செலவு எவ்வளவு என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் செலவுகள் வழக்கமான இராணுவ வரவு-செலவுத் திட்டத்திலிருந்தே மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# Avocado-Hand - Switzerland இல் அதிகரிக்கும் சமையலறை வெட்டுக் காயங்கள்




Avocado பழத்தின் கொட்டையை கத்தியால் அகற்றும்போது கத்தி வழுக்கி கை அல்லது விரலில் ஆழமான வெட்டுக் காயம் ஏற்படுவதை "Avocado-Hand" என்று அழைக்கின்றனர்.

Switzerland இல் Avocado வெட்டுவதால் மட்டும் ஆண்டுக்கு எத்தனை பேர் காயமடைகிறார்கள் என்பதற்குத் தனியான புள்ளிவிவரம் இல்லை. ஆனால் சமையலறை வெட்டுக் காயங்கள் பொதுவாக அதிகம் இடம்பெறுகின்றன.

BFU தகவலின்படி, சமை யலறைச் செய ல்பாடுகளின்போது அண்மைய ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு சுமார் 43,000 பேர் காயமடைந்துள்ளனர். 2010இல் 39,450 ஆக இருந்த சமையலறை விபத்துகள், 2022இல் 45,090 ஆக உயர்ந்துள்ளன.

"Avocado-Hand" காயம் சாதாரண வெட்டுக் காயமாக மட்டும் இருக்காது. கத்தியால் நரம்புகள், இரத்த நாளங்கள் மற்றும் விரல்களை இயக்கும் தசை நாண்கள் (Beugesehnen) துண்டிக்கப்படலாம். கடுமையான நிலையில் அறுவைச் சிகிச்சையும் பல வாரங்கள் அல்லது மாதங்கள் நீடிக்கும் புனர்வாழ்வு சிகிச்சையும் தேவைப்படலாம்.


SAVE THE DATE
வெள்ளிவீதி
இலக்கியக் கூடுகை 2
அமர்வு 1
எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர்
காயத்ரி ஆர்.
அமர்வு 2
எழுத்தாளர்
தில்லை
அமர்வு 3
எழுத்தாளர்
தர்மினி
அமர்வு 4
எழுத்தாளர்
நவமகன்
அமர்வு 5
எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர்
பிரசாந்தி சேகரம்
அமர்வு 6
எழுத்தாளர் - அரங்கக் கலைஞர்
லிவிங் ஸ்மைல் வித்யா
01.11.2026
SUNDAY
ZÜRICH, SWITZERLAND
சயந்தன் /
+41 79 519

# Switzerland-இல் வாழ விரும்பும் வெளிநாட்டவர்களுக்கு Integration Agreement - என்ன விதிகள்?




Switzerland-இல் நீண்டகாலமாக வாழ விரும்பும் வெளிநாட்டவர்கள், நாட்டின் சமூகத்துடன் தங்களை இணைத்துக்கொள்வது – Integration – முக்கியமான நிபந்தனையாக உள்ளது. சில கன்டோன்களில் இதற்காக அதிகாரப்பூர்வமான Integration Agreement (Integrationsvereinbarung) ஒன்றிலும் கையெழுத்திட வேண்டியிருக்கலாம்.

### Integration என்றால் என்ன?

Switzerland குடிவரவு செயலகமான SEM-இன் அடிப்படையில், வெற்றிகரமான ஒருங்கிணைப்பில் நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வாழ்க்கையில் பங்கேற்பது, வசிக்கும் பிராந்தியத்தின் தேசிய மொழியைக் கற்றுக்கொள்வது, Swiss வாழ்க்கை முறை மற்றும் உள்ளூர் நடை முறைகளைப் புரிந்துகொள்வது ஆகியவை அடங்கும்.

அத்துடன் சட்டங்களை மதித்தல் மற்றும் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லாமல் இருப்பதும் முக்கியம்.

### Integration Agreement எதற்காக?

கன்டோன் குடிவரவு அதிகாரிகள் சில வெளிநாட்டவர்களின் B அல்லது L அனுமதிப்பத்திரம் வழங்குதல் அல்லது புதுப்பித்தல் தொடர்பாக

Integration Agreement-ஐ பயன்படுத்தலாம்.

இதில் மொழித்திறனை மேம்படுத்துதல், கல்வி அல்லது தொழில் பயிற்சி, வேலைவாய்ப்பில் இணைதல் மற்றும் Switzerland-இன் வாழ்க்கை, பொருளாதாரம், சட்ட அமைப்பு குறித்த அறிவைப் பெறுதல் போன்ற இலக்குகள் இடம்பெறலாம்.

## எல்லா வெளிநாட்டவர்களுக்கும் கட்டாயமா?

இல்லை. பொதுவாக இத்தகைய ஒப்பந்தங்கள் EU/EFTA நாடுகளுக்கு வெளியிலிருந்து வரும் சில குடியே றிகளிடம் பயன்ப டுத்தப்படுகின்றன. EU/EFTA நாட்டவர்கள் மற்றும் Swiss குடிமக்களின் குடும்ப உறுப்பினர்கள் பொதுவாக இதன் முக்கிய இலக்குக் குழுவாக இருப்பதில்லை.

நடைமுறை கன்டோனுக்கு கன்டோன் மாறுபடுகிறது. Basel-Stadt, Bern மற்றும் St. Gallen போன்ற கன்டோன்களில் Integration Agreement பயன்படுத்தப்படும் நிலையில், Zug போன்ற இடங்களில் அது கட்டாயமாக்கப்படவில்லை.

## Zürich-லும் புதிய நடைமுறை வருமா?

Zürich கன்டோனிலும் இத்தகைய Integration Agreement முறையை அறிமுகப்படுத்துவது குறித்து அரசியல் மட்டத்தில் விவாதம் நடைபெறுகிறது.

## முன்வைக்கப்பட்டுள்ள அம்சங்களில்:

ஆண்களும் பெண்களும் சமமானவர்கள். சட்டம் மதத்திற்கு மேலானது. ஒரு தேசிய மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும்.

குழந்தைகள் கட்டாயக் கல்வியில் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

ஒரு ஆண்டுக்குள் தொழில்சந்தையில் இணைவதை இலக்காகக் கொள்ள வேண்டும்.

சட்டங்களை மதித்து குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடாது.

Integration-க்கு CHF 248.8 மில்லியன்

வெளிநாட்டவர்கள் சமூகத்திலும் தொழில்சந்தையிலும் சிறப்பாக இணைவதற்கு உதவும் கன்டோன் Integration Programmes-க்காக மத்திய அரசு சுமார் 248.8 மில்லியன் Swiss francs ஒதுக்கியுள்ளது.

இதில் சுமார் CHF 88 மில்லியன் மொழிப் பயிற்சிக்கும், CHF 73 மில்லியன் வேலைவாய்ப்பு சார்ந்த நடவடிக்கைகளுக்கும், CHF 26 மில்லியன் ஆலோசனை சேவைகளுக்கும் ஒதுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# Zug-இல் ETH Zrich உடன் புதிய கற்றல்-ஆராய்ச்சி மையம்: CHF 55 மில்லியன் வழங்க மாநிலம் முன்வருகிறது

Zug மாநிலம், ETH Zürich மற்றும் Zug பகுதியின் தொழில் நிறுவனங்கள் இணைந்து உருவாக்கவுள்ள புதிய Lern- und Forschungszentrum திட்டத்திற்காக 55 மில்லியன் Swiss francs ஒதுக்க திட்டமிட்டுள்ளது. மாநில நாடாளுமன்றம் முதல் வாசிப்பில் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த மையம் Zug நகரின் Göbli பகுதியில் உள்ள Tech Cluster Zug AG வளாகத்தில் உருவாக்கப்பட உள்ளது. ETH Zürich மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் Zug நிறுவனங்களில் தொழிற்பயிற்சி பெறும் இளைஞர்கள் இணைந்து, தொழில்துறைக்கு நேரடியாக பயன்படும் செயல்முறை ஆராய்ச்சி மற்றும் திட்டங்களில் பணியாற்றுவதே இதன் நோக்கம்.

முதல் கட்டத்தின் மொத்த செலவு CHF 110 மில்லியன். அதில்:

Zug மாநிலம்: CHF 55 மில்லியன்

Zug நகரம்: CHF 27.5 மில்லியன்

தொழில் கூட்டாளர்கள்: CHF 16.6 மில்லியன்

ETH Zürich: CHF 10 மில்லியன்

முதல் கட்டத்தில் ஏற்கனவே உள்ள இரண்டு கட்டிடங்கள் மாற்றி அமைக்கப்படுவதுடன், சுமார் 2029/30 முதல் 10 ஆண்டுகள் செயல்பாட்டு செலவுகளும் இதில் அடங்கும். மாநிலத்தின் பங்கு, OECD குறைந்தபட்ச வரி மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாயிலிருந்து நிதியளிக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கு அனைத்து முக்கிய அரசியல் அணிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. இறுதி ஒப்புதல் பெற இரண்டாம் வாசிப்பு, Zug நகர பாராளுமன்றம் மற்றும் நகர வாக்காளர்களின் அனுமதியும் தேவைப்படுகிறது.




# Geneva Grand Theatre-இல் மறைக்கப்பட்ட கேமராக்கள் - சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்

Geneva-வின் புகழ்பெற்ற Grand Théâtre ஊழியர்களின் உடைமாற்றும் அறைகள் மற்றும் குளியலறைகளில் மறைத்து வைக்கப்பட்ட கேமராக்கள் தொடர்பான விசாரணையில் முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2025 மார்ச் மாதம் பெண்கள் பயன்படுத்திய குளியலறையில் மறைக்கப்பட்ட கேமரா கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில், தொழில்நுட்பப் பிரிவுடன் தொடர்புடைய Geneva நகர ஊழியர் ஒருவர் சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த மே 11 அன்று அதிகாலையில் பொலிஸார் Grand Théâtre-இல் சோதனை நடத்தி அந்த நபரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். அதே நேரத்தில் அவரது வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. அங்கு hard drives மற்றும் USB சாதனங்களில் ஆயிரக்கணக்கான படங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக Le Temps தெரிவிக்கிறது. அவற்றில் உடைமாற்றும் அறைகள், கழிப்பறைகள் மற்றும் குளியலறைகளில் பல பெண்கள் பதிவாகியிருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த விவகாரம் 2025 சம்பவத்துடன் மட்டும் முடிவடையவில்லை. 2014ஆம் ஆண்டிலும் Grand Théâtre நடனக் கலைஞர்களின் உடைமாற்றும் அறையில் இதேபோன்ற மறைக்கப்பட்ட கேமரா கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. தற்போதைய சந்தேக நபருக்கும் அந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு இருக்கலாம் என விசாரணை நடைபெறுகிறது. தற்போது 23 பெண்கள் புகார்தாரர்களாக குற்றவியல் நடவடிக்கையில் இணைந்துள்ளனர் என்று Le Temps தெரிவிக்கிறது. சந்தேக நபர் பணியிலிருந்து சம்பளமின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும், விசாரணை தொடர்ந்து நடைபெறுவதால் அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை குற்றமற்றவர் என்ற சட்டக் கோட்பாடு பொருந்தும். இதையடுத்து Grand Théâtre உடைமாற்றும் அறைகளுக்கு பெயரிடப்பட்ட access badges, வழக்கமான பாதுகாப்புச் சோதனைகள் மற்றும் ஊழியர்களுக்கான கட்டாயப் பயிற்சி உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2014 சம்பவத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய முன்னாள் ஊழியர்களும் தொடர்புகொள்ளுமாறு நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.




# Geneva-வின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, அண்டை பிரான்சின் போக்குவரத்து கட்டமைப்புகளில் CHF 39.5 மில்லியன் முதலீடு செய்யலாமா?

Geneva மாநிலத்தில் நாள்தோறும் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, அண்டை பிரான்ஸ் பகுதியில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த 39.5 மில்லியன் Swiss francs முதலீடு செய்யும் திட்டம் வாக்கெடுப்புக்கு வருகிறது.

27 செப்டம்பர் 2026 அன்று Geneva வாக்காளர்கள் இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவா, எதிர்ப்பா என்பதைத் தீர்மானிக்கவுள்ளனர்.

## எல்லைத் தொழிலாளர்களால் அதிகரிக்கும் போக்குவரத்து

Geneva-வில் பணிபுரிந்தாலும் பிரான்சில் வசிக்கும் Frontaliers - எல்லை தாண்டி வேலைக்கு வருபவர்கள் தினமும் பெருமளவில் France-Switzerland எல்லையைக் கடக்கின்றனர்.

Ferney-Voltaire உள்ளிட்ட எல்லைப் பகுதிகளிலிருந்து வரும் வாகனங்களால் காலை மற்றும் மாலை நேரங்களில் சாலைகளில் கடுமையான நெரிசல் ஏற்படுகிறது.

இதற்குத் தீர்வாக, பிரான்ஸ் எல்லைப் பகுதியில் Park-and-Ride வசதிகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் Bus/Public Transport இணைப்புகளை மேம்படுத்துவது திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## "பிரான்சில் ஏன் Geneva பணம் செலவிட வேண்டும்?"

இதுவே அரசியல் சர்ச்சையின் மையக் கேள்வியாகியுள்ளது.

திட்டத்தை ஆதரிக்கும் கட்சிகள், அமைப்புகள் மற்றும் பொருளாதாரத் துறையினர், எல்லையின் பிரான்ஸ் பகுதியில் பொதுப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தினால் அதிகமான Frontaliers தங்கள் கார்களை அங்கே நிறுத்திவிட்டு Bus போன்ற பொதுப் போக்குவரத்தில் Geneva-வுக்குள் வர முடியும் எனக் கூறுகின்றனர்.

இதனால் Geneva சாலைகளில் வாகன எண்ணிக்கையும் நெரிசலும் குறையும் என்பது அவர்களின் வாதம்.

மறுபுறம் MCG (Mouvement Citoyens Genevois) இந்தத் திட்டத்தை கடுமையாக எதிர்க்கிறது. Geneva வரிப்பணத்தை பிரான்சில் உள்ள கட்டமைப்புகளுக்காக செலவிடுவது தொடர்பாக அந்தக் கட்சி எதிர்ப்பு தெரிவிக்கிறது.

## இறுதி முடிவு மக்களிடம்

எனவே செப்டம்பர் 27 வாக்கெடுப்பின் முக்கிய கேள்வி:

"Geneva-வின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, அண்டை பிரான்சின் போக்குவரத்து கட்டமைப்புகளில் CHF 39.5 மில்லியன் முதலீடு செய்யலாமா?"

Geneva மற்றும் France எல்லை தாண்டிய போக்குவரத்தின் எதிர்காலத்திற்கு இந்த வாக்கெடுப்பு முக்கியமானதாக அமையவுள்ளது.

# Waadt அரசியலில் அதிரடி: Mitte கட்சியிலிருந்து வெளியேறிய Valrie Dittli - புதிய கட்சி ஆரம்பம்




Waadt மாநில அரசாங்க உறுப்பினர் Valérie Dittli, Mitte (Le Centre) கட்சியிலிருந்து விலகி, "Mouvement libéral" என்ற புதிய அரசியல் அமைப்பை ஆரம்பிப்பதாக அறிவித்துள்ளார். புதிய கட்சியின் சார்பில் 2027 Waadt மாநில அரசாங்கத் தேர்தலில் இரண்டாவது பதவிக்காலத்திற்குப் போட்டியிட அவர் திட்டமிட்டுள்ளார்.

## ஏன் இந்த திடீர் முடிவு?

Dittli மீண்டும் Staatsrat பதவிக்குப் போட்டியிடுவதற்கு Waadt Mitte கட்சித் தலைமையில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. மாநிலக் கட்சி நிர்வாகம் 14-6 வாக்குகளால், இரண்டு பேர் வாக்களிக்காமல் இருக்க, அவரது வேட்புமனுவை ஆதரிக்க வேண்டாம் என்று பிரதிநிதிகளுக்கு பரிந்துரைத்திருந்தது.

செப்டம்பர் 2 ஆம் தேதி நடைபெறவிருந்த கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் அவரது வேட்புமனு குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவிருந்தது. ஆனால் அதற்கு முன்னதாகவே Dittli கட்சியை விட்டு வெளியேறியுள்ளார்.

Dittli கூறுகையில், கடந்த சில வாரங்களில் ஏற்பட்ட நிலைமை மிகவும் கடினமாகிவிட்டதாகவும், கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண பலமுறை முயன்றதாகவும், இறுதியில் வேறு வழியில்லாமல் இந்த முடிவை எடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

## அடுத்து என்ன?

தற்போது விவசாயம் மற்றும் டிஜிட்டல் துறைகளுக்குப் பொறுப்பான Dittli, புதிய Mouvement libéral அமைப்பின் கீழ் தனது Staatsrat பதவியைத் தக்கவைக்கப் போட்டியிடுகிறார்.

Waadt மாநில அரசாங்கத் தேர்தலின் முதல் சுற்று 28 பிப்ரவரி 2027 அன்று நடைபெற உள்ளது.

இது Waadt மாநில அரசியலில் புதிய அரசியல் போட்டியை உருவாக்கக்கூடிய முக்கிய திருப்பமாக பார்க்கப்படுகிறது.




# Weltklasse Zrich: Audrey Werro உலக சாதனையை நெருங்கினார்;

## ஒரே நாளில் இரண்டு உலக சாதனைகள்!

Zürich Letzigrund மைதானத்தில் நடைபெற்ற Weltklasse Zürich 2026 போட்டியில் Switzerland-ன் 22 வயதான நட்சத்திர வீராங்கனை Audrey Werro, பெண்களுக்கான 800 மீட்டரில் அசத்தலான வெற்றியைப் பெற்றார்.

Werro 1:53.70 நேரத்தில் பந்தயத்தை முடித்து தனது சொந்த Swiss சாதனையை மேலும் 0.10 விநாடி மேம்படுத்தினார்.

### உலக சாதனைக்கு வெறும் 0.42 விநாடி!

1983ல் Jarmila Kratochvílová பதிவு செய்த 1:53.28 என்ற 800 மீட்டர் உலக சாதனையை விட Werro தற்போது வெறும் 0.42 விநாடி மட்டுமே பின்தங்கியுள்ளார். தனது வாழ்க்கையில் மூன்றாவது முறையாக 1:54 நிமிடத்திற்குள் அவர் ஓடியுள்ளார்.

இதற்கிடையில் Weltklasse Zürich-இல் மற்றொரு பரபரப்பான சாதனையும் பதிவானது. Alison dos Santos ஆண்களுக்கான 400 மீட்டர் hurdles-ல் Karsten Warholm-ன் உலக சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை படைத்தார்.

இதனால் Zürich-இல் நடைபெற்ற இந்த தடகள இரவு Swiss சாதனை, உலக சாதனைகள் மற்றும் Werro-வின் உலக சாதனை வேட்டை என மறக்க முடியாத போட்டியாக மாறியுள்ளது.




# Zug: 2027ல் மின்சாரம் மலிவு - ஆனால் Gas கட்டணம் அதிகரிப்பு

Zug பகுதியின் WWZ நிறுவனம் 2027 ஜனவரி 1 முதல் மின்சாரக் கட்டணத்தை குறைக்கிறது. ஆண்டுக்கு 4,500 kWh பயன்படுத்தும் நான்கு பேர் கொண்ட சராசரி குடும்பத்திற்கு மொத்த மின்சாரச் செலவு 3.4% குறையும். இதனால் வருடத்திற்கு சுமார் CHF 33 சேமிக்கலாம். குறைந்த மின்சார கொள்முதல் செலவுகளே இதற்கான முக்கிய காரணம்.

மேலும் 2027 முதல் WWZ புதிய காலநிலை அடிப்படையிலான மின்சாரக் கட்டண முறையை அறிமுகப்படுத்துகிறது. கோடைக்காலத்தில் Solar மின்சார உற்பத்தி அதிகமாக இருப்பதால் மின்சாரம் மலிவாகவும், குளிர்காலத்தில் தேவை அதிகமாக இருப்பதால் விலை அதிகமாகவும் இருக்கும். வீடுகள் மற்றும் சிறு நிறுவனங்களுக்கான மின்வலையமைப்பு பயன்பாட்டுக் கட்டணம் பெரும்பாலும் மாறாமல் இருக்கும்.

## Gas மட்டும் விலை அதிகரிக்கிறது

2026 அக்டோபர் 1 முதல் Gas கட்டணம் சுமார் 0.3 Rappen/kWh அதிகரிக்கிறது. ஆண்டுக்கு 25,000 kWh Gas பயன்படுத்தும் ஒரு சாதாரண வீட்டிற்கு இதனால் சுமார் CHF 75 கூடுதல் செலவு ஏற்படும்.

Gas விலை உயர்வுக்கு அதிகரித்த Network செலவுகள், குறுகிய கால Gas கொள்முதல் செலவுகள் மற்றும் மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் சூழ்நிலையால் ஏற்பட்ட சந்தை ஏற்றத்தாழ்வுகள் காரணங்களாக WWZ தெரிவித்துள்ளது.

# Aarau துப்பாக்கிச் சூடு:

# காயமடைந்தவரின் உயிரைக் காப்பாற்ற உதவிய Rave நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்

Aarau-வில் நடைபெற்ற Rave நிகழ்ச்சியின்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர், காயமடைந்த ஒருவரின் கடுமையான இரத்தப்போக்கை உடனடியாகக் கட்டுப்படுத்தி அவரது உயிரைக் காப்பாற்ற உதவிய சம்பவம் தற்போது கவனம் பெற்றுள்ளது.

நிகழ்ச்சியின் இணை ஏற்பாட்டாளரான Livio Montinero, துப்பாக்கிச் சூடு ஆரம்பித்தபோது அவசர வெளியேறும் வாயிலுக்கு அருகில் இருந்ததாக SRF-க்கு தெரிவித்துள்ளார். பின்னர் சுமார் ஆறு அல்லது ஏழு பேருடன் Pferderen-nbahn பகுதிக்குச் சென்றபோது, அவர்களது குழுவில் இருந்த ஒருவர் பின்னால் இருந்து துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.

காயமடைந்தவரை அங்கேயே விட்டுவிடாமல், குழுவினர் அவரை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்போது Foodtruck நடத்துநரின் மனைவியிடமிருந்து கிடைத்த சமையல் முன்சட்டையை (Schürze) பயன்படுத்தி காயத்திலிருந்து ஏற்பட்ட இரத்தப்போக்கை தற்காலிகமாகக் கட்டுப்படுத்தினர். பின்னர் அருகிலிருந்த வீட்டுக்குச் சென்று மருத்துவ அவசர உதவியை அழைத்தனர்.

### 43 வயது சந்தேகநபர் கைது

இந்தத் துப்பாக்கிச் சூடு தொடர்பாக 43 வயதான Switzerland நாட்டவர் ஒருவர் தீவிர சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக Aargau மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போதைய விசாரணையின் அடிப்படையில், ஒரே நபரே தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர்.

தாக்குதலுக்கான பின்னணி மற்றும் நோக்கம் தொடர்பான மேலதிக தகவல்களை புதன்கிழமை வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் Switzerland-ல் வசித்து வந்த 22 வயதான இத்தாலிய பெண் ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஒரு ஜெர்மன் பெண் மற்றும் 24 முதல் 31 வயதுக்குட்பட்ட நான்கு Switzerland நாட்டவர்கள் காயமடைந்து மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பொலிஸாரின் தகவலின்படி, தாக்குதலில் கைத்துப்பாக்கி மற்றும் தாக்குதல் துப்பாக்கி (Sturmgewehr) பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### மனிதநேயத்தை வெளிப்படுத்திய சில நிமிடங்கள்

துப்பாக்கிச் சூட்டின் குழப்பமான சூழ்நிலையிலும் காயமடைந்தவரை விட்டுவிடாமல் பாதுகாப்பாக அழைத்துச் சென்று, கிடைத்த பொருளைக் கொண்டு இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்திய Livio Montinero மற்றும் அவருடன் இருந்தவர்களின் உடனடி நடவடிக்கை முக்கியத்துவம் பெற்றுள்ளது.




# Winterthur காட்டில் 3 மீட்டர் நீள Python பாம்பு

## உரிமையாளரைத் தேடும் பொலிஸார்

Winterthur-Sennhof பகுதியில் உள்ள காட்டில் சுமார் மூன்று மீட்டர் நீளமுள்ள Teppich-python (Carpet Python) பாம்பு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வியாழக்கிழமை மாலை காட்டுப் பகுதியில் பழுப்பு மற்றும் beige நிற வடிவங்களுடன் மிகப்பெரிய பாம்பு ஊர்ந்து செல்வதை ஒருவர் அவதானித்ததைத் தொடர்ந்து, Zürich மாகாண பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து பொலிஸின் விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஊர்வன நிபுணர் சம்பவ இடத்திற்குச் சென்று, பாம்பை பாதுகாப்பாகப் பிடித்தார்.

### விஷப்பாம்பு அல்ல

காட்டில் நடைப்பயிற்சி மேற்கொள்பவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது விஷமற்ற மலைப்பாம்பு வகையைச் சேர்ந்தது. தனது இரையை உடலால் சுற்றி இறுக்கிப் பிடிக்கும் வகையைச் சேர்ந்த பாம்பாகும்.

எனினும், இந்த மூன்று மீட்டர் நீள பாம்பு எங்கிருந்து வந்தது, எவ்வாறு Winterthur காட்டிற்குள் சென்றது என்பது இதுவரை தெரியவில்லைஉரிமையாளர் யார்?

பாம்பு தற்போது பாதுகாப்பான இடத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் உரிமையாளரை அடையாளம் காண Zürich மாகாண பொலிஸார் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

இந்தப் பாம்பை அடையாளம் காண்பவர்கள் அல்லது இது வழக்கமாக எங்கு வள ர்க்கப்பட்டது என்பது குறித்து தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரைத் தொட ர்புகொள்ளுமாறு கேட்டு க்கொள்ள ப்பட்டுள்ளனர்.

# குழந்தைப் பேறு திட்டமிடல்:




## எப்போது கவனம் செலுத்த வேண்டும்?

குழந்தைப் பேறு குறித்த திட்டமிடல் மிகவும் தனிப்பட்டதாக இருந்தாலும், வயது மற்றும் உடலியல் காரணிகள் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பெண்களின் இயற்கையான கருத்தரிப்பு வாய்ப்பு 30 வயதின் தொடக்கத்திலிருந்தே படிப்படியாகக் குறையத் தொடங்கி, 35 வயதுக்குப் பின்னர் வேகமாகக் குறைகிறது என்று சூரிச்சிலுள்ள இனப்பெருக்க மருத்துவ நிபுணர்கள் விளக்குகின்றனர்.

கணிப்பின்படி, ஒரு மாதவிடாய் சுழற்சியில் இயற்கையாக கர்ப்பம் தரிக்கும் வாய்ப்பு சுமார் 30 வயதில் 30%, 35 வயதில் 15%, 40 வயதில் 5% எனக் கூறப்படுகிறது. இருப்பினும், 40 வயதில் கர்ப்பம் தரிப்பது சாத்தியமற்றது என்பதல்ல.

குழந்தைப் பேறு எதிர்காலத் திட்டமாக இருந்தால், முன்கூட்டியே fertility test மேற்கொள்வது தற்போதைய நிலையைப் புரிந்துகொள்ள உதவலாம். AMH பரிசோதனை கருமுட்டை இருப்பு பற்றிய ஒரு குறிப்பை வழங்கினாலும், கருமுட்டையின் தரத்தை அது நிர்ணயிக்காது.

Social Freezing முறையில் இளம் வயதில் கருமுட்டைகளை உறையவைத்து எதிர்கால பயன்பாட்டிற்காகப் பாதுகாக்க முடியும். ஆனால் இது எதிர்காலத்தில் குழந்தை பிறக்கும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல.

குழந்தைப் பேறு சிக்கல்கள் பெண்களை மட்டும் சார்ந்தவை அல்ல. சுமார் மூன்றில் ஒரு பங்கு சம்பவங்களில் ஆண்களின் கருத்தரிப்பு திறன் முக்கிய காரணியாகவும், மேலும் மூன்றில் ஒரு பங்கில் இருவரது காரணிகளும் தொடர்புடையதாகவும் இருக்கலாம்.

புகைப்பிடித்தல், மது, நீண்டகால மனஅழுத்தம், அதிக அல்லது குறைந்த உடல் எடை, தூக்கமின்மை போன்றவை கருத்தரிப்பு திறனைப் பாதிக்கக்கூடும். ஆரோக்கியமான வாழ்க்கை முறை உதவக்கூடும்; ஆனால் வயது காரணமாக ஏற்படும் கருமுட்டை இருப்பின் இயற்கையான குறைவை நிறுத்த முடியாது.




# Zuerich பாடசாலைகளில்

# Handy தடை வருமா?

Kindergarten முதல் 9ஆம் வகுப்பு வரை - பள்ளி வளாகம் முழுவதும் Mobile, Tablet பயன்பாட்டைத் தடை செய்ய முன்மொழிவு

ZÜRICH: Zürich மாகாண பொதுப் பள்ளிகளில் மாணவர்களின் தனிப்பட்ட Handy மற்றும் Tablet பயன்பாட்டைத் தடை செய்வதற்கான முன்மொழிவை Zürich Kantonsrat ஆதரித்துள்ளது.

திங்கட்கிழமை நடைபெற்ற வாக்கெடுப்பில் இந்த Postulat 92-82 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இரண்டு உறுப்பினர்கள் வாக்களிக்கவில்லை.

முன்மொழிவின்படி Kindergarten முதல் 9ஆம் வகுப்பு வரை, பாடநேரம் மட்டுமின்றி இடைவேளைகளிலும் பள்ளி வளாகம் முழுவதிலும் தனிப்பட்ட Handy மற்றும் Tablet பயன்பாட்டைத் தடை செய்ய வேண்டும்.

ஆதரவாளர்கள், இதனால் மாணவர்களுக்கு அமைதியான சூழலும் பாடங்களில் அதிக கவனமும் கிடைக்கும் எனக் கூறுகின்றனர். எதிர்ப்பாளர்கள், மாகாணம் முழுவதற்கும் ஒரே விதியை விதிப்பது Gemeinden-களின் சுயாதீன முடிவெடுக்கும் வாய்ப்பைக் குறைக்கும் என விமர்சிக்கின்றனர்.

### தடை இன்னும் அமலுக்கு வரவில்லை

Kantonsrat-ன் முடிவு காரணமாக Handy தடை உடனடியாக அமலுக்கு வரவில்லை. Zürich Regierungsrat கட்டாயமான மாகாண வழிகாட்டுதல்களை உருவாக்குவது குறித்து ஆய்வு செய்து, இரண்டு ஆண்டுகளுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.




# St.Gallen-ல் Switzerland-ன் முதல் E-Collecting Pilot!

ST.GALLEN: Switzerland-ல் முதன்முறையாக மாகாண அளவிலான Initiative மற்றும் Referendum-களுக்கான கையொப்பங்களை Digital முறையில் சேகரிக்கும் E-Collecting Pilot St.Gallen மாகாணத்தில் September 1, 2026 முதல் தொடங்குகிறது.

இதுவரை கையொப்பங்கள் பெரும்பாலும் காகிதத்தில் நேரடியாக அல்லது தபால் மூலம் சேகரிக்கப்பட்ட நிலையில், இனி தகுதியுள்ள வாக்காளர்கள் Online மூலமாகவும் கையொப்பமிட முடியும்.

## எப்படி கையொப்பமிடுவது?

St.Gallen மாகாணத்தின் E-Collecting platform மூலம் Login செய்து அல்லது சம்பந்தப்பட்ட Initiative/Referendum குழு வழங்கும் QR Code வழியாகச் செல்லலாம்.

Digital signature வழங்குவதற்கு முன் மாகாணத்தின் E-Login மூலம் அடையாளம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். Online tax declaration போன்ற பிற மாகாண Digital Services-ல் பயன்படுத்தப்படும் முறையைப் போன்றது இது.

## முதல் கட்டத்தில் 50% மட்டுமே Digital

Pilot திட்டத்தின் ஆரம்பத்தில் ஒரு Initiative அல்லது Referendum-க்கு தேவையான கையொப்பங்களில் அதிகபட்சம் 50% மட்டுமே Electronic signatures ஆக இருக்க முடியும்.

எனவே காகிதம், தபால் அல்லது நேரடி கையொப்ப சேகரிப்பு இன்னும் அவசியம். எதிர்காலத்தில் Digital கையொப்பங்களின் அனுமதிக்கப்பட்ட விகிதத்தை 75% வரை உயர்த்துவதற்கான வாய்ப்பும் உள்ளது.

## இப்போது மாகாண வாக்கெடுப்புகளுக்கு மட்டும்

இந்த Pilot தற்போது St.Gallen canton அளவிலான Initiatives மற்றும் Referendums-க்கு மட்டுமே பொருந்தும். நகராட்சி அல்லது Gemeinde அளவிலான முயற்சிகளுக்கு இப்போது இந்த வசதி இல்லை.

தேவையான குறைந்தபட்ச கையொப்ப எண்ணிக்கையும் தற்போதைக்கு மாற்றப்படவில்லை.

## போலி கையொப்பங்களைத் தடுக்க வசதி

Digital signatures தானாகவே வாக்காளர் பதிவேட்டுடன் சரிபார்க்கப்படுவதால், போலியான அல்லது ஒரே நபரின் பல கையொப்பங்களைத் தடுப்பது எளிதாகும்.

இதனால் காகித கையொப்பங்களை தனித்தனியாக சரிபார்க்க வேண்டிய Gemeinden-களின் நிர்வாகப் பணிச்சுமையும் குறையலாம்.




# Switzerland - Germany:
# பொலிஸ் மற்றும் குடியேற்ற ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடிவு

## Chiasso-வில் Beat Jans - Alexander Dobrindt சந்திப்பு; எல்லை தாண்டிய குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் கூடுதல் கவனம்

CHIASSO (TI): Switzerland நீதித்துறை மற்றும் பொலிஸ் துறை அமைச்சர் Beat Jans, ஜெர்மனியின் உள்துறை அமைச்சர் Alexander Dobrindt ஆகியோர் திங்கட்கிழமை Chiasso-வில் சந்தித்து, இரு நாடுகளுக்கும் இடையிலான பொலிஸ் மற்றும் குடியேற்ற ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இரு அமைச்சர்களும் Chiasso-வில் உள்ள பொலிஸ் மற்றும் சுங்க ஒத்துழைப்பு மையத்தையும் பார்வையிட்டனர். இந்தச் சந்திப்பு Germany உடனான நடைமுறை பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கானது என Beat Jans தெரிவித்தார்.

### Aarau சம்பவத்தையும் குறிப்பிட்ட Beat Jans

செய்தியாளர் சந்திப்பின் ஆரம்பத்தில் Aarau-வில் இடம்பெற்ற கொடிய துப்பாக்கிச் சூடு குறித்து Beat Jans தனது அதிர்ச்சியையும் கவலையையும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் 22 வயது இளம்பெண் உயிரிழந்ததுடன், மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

இதன் பின்னணியில், எல்லை தாண்டிய குற்றச்செயல்களுக்கு எதிரான போராட்டம் முன்பைவிட தற்போது மிகவும் அவசியமானதாகியுள்ளது; அதனை வலுப்படுத்த வேண்டும் என Jans வலியுறுத்தினார்.




# Kreuzlingen அகதிகள் மையம்:
## பாதுகாப்பு கோரி குடியிருப்பாளர்கள் மனு

Kreuzlingen-ல் உள்ள Bundesasylzentrum (BAZ) தொடர்பான பாதுகாப்பு நிலைமையை மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டும் எனக் கோரி, Palmenweg பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் Petition ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இரவு நேரங்களில் சிலர் தனியார் தோட்டங்களுக்குள் நுழைந்ததாகவும், வீடுகளுக்கு அருகே தங்க முயன்றதாகவும், திருட்டு மற்றும் அத்துமீறல் சம்பவங்கள் ஏற்பட்டதாகவும் இரண்டு பெண்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் சில குடியிருப்பாளர்கள் வீடுகளில் கண்காணிப்பு கேமராக்களையும் பொருத்தியுள்ளனர். ஒரு சம்பவத்தில் தனது காருக்குள் ஒருவர் இருந்ததாகவும், மற்றொரு சம்பவத்தில் வீட்டுக்குள் நுழைய முயற்சி நடந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

Petition தொடங்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் 300-க்கும் அதிகமான கையொப்பங்கள் கிடைத்துள்ளன. October இறுதி வரை கையொப்பங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

அதேவேளை, புகார் தெரிவிக்கும் பெண்களே BAZ-ல் தங்கியிருப்பவர்களில் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே பிரச்சினைகளில் ஈடுபடுவதாக தெளிவு படுத்துகின்றனர். எனவே அனைத்து asylum seekers-ஐயும் இந்தச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்த முடியாது என தெரிவித்துள்ளனர்.

Bundesasylzentrum தொடர்பான பொறுப்பு Bund, Kanton மற்றும் Gemeinde ஆகியவற்றுக்கு பகிரப்பட்டிருப்பதால், Kreuzlingen நகரம் தனியாக மையத்தை மூடவோ இடமாற்றவோ முடியாது என Stadtpräsident Thomas Niederberger தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 2024-ல் BAZ-ஐ மூடக் கோரிய Motion, Kreuzlingen Gemeinderat-ல் 34 எதிர்ப்பு - 1 ஆதரவு - 1 விலகல் என்ற வாக்குகளுடன் நிராகரிக்கப்ப ட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்..

ராஜ் சிவநாதன் - மெல்பேர்ன், அவுஸ்திரேலியா



# பலாலியும் காங்கேசன்துறையும் இன்னும் ஏன் காத்திருக்கின்றன?

## வடக்கின் அபிவிருத்தி குறித்து பிமல் ரத்நாயக்கவின் தொடர்ச்சியான நிலைப்பாடு எழுப்பும் முக்கியமான கேள்விகள்

### ஒரு முக்கியமான கேள்வி

பலாலி யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தையும் காங்கேசன்துறை (KKS) துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா உதவத் தயாராக இருக்கின்ற நிலையில், இந்த இரண்டு முக்கிய திட்டங்களும் ஏன் இன்னும் முழுமையாக முன்னேறவில்லை என்பது வடக்கு மக்களிடையே




எழுந்துள்ள நியாயமான கேள்வியாகும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, யார் நிதியுதவி வழங்கினாலும் எந்தத் திட்டம் எங்கு, எப்போது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கும் என வலியுறுத்தினார்.

சட்டரீதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான இறுதி முடிவை இலங்கை அரசாங்கமே எடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் உண்மையான கேள்வி அது அல்ல. இந்திய உதவி கிடைக்கத் தயாராக இருக்கும்போது,



வடக்கின் பொருளாதாரத்திற்கு முக்கியமான பலாலியும் KKS-உம் ஏன் தொடர்ந்து தாமதப்படுத்தப்படுகின்றன?

## இது முதல் தடவையல்ல

பிமல் ரத்நாயக்கவின் தற்போதைய கருத்து தனித்த சம்பவமாகப் பார்க்கப்பட முடியாது. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஏற்கனவே பலாலி விமான நிலைய விரிவாக்கத்திற்கும் KKS துறைமுக அபிவிருத்திக்கும் அமைச்சர் தடையாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். மேலும், இந்த அணுகுமுறைக்குப் பின்னால் இந்திய எதிர்ப்பு அல்லது தமிழ் எதிர்ப்பு மனநிலை இருக்கிறதா என்ற கடுமையான அரசியல் கேள்வியையும் அவர் எழுப்பினார்.

இத்தகைய குற்றச்சாட்டுகளை உறுதியான ஆதாரமின்றி உண்மையென ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் அதற்குப் பதிலளிப்பதற்கான சிறந்த வழி வெளிப்படைத்தன்மையே. KKS பொருளாதார ரீதியில் சாத்தியமற்றது என்று அரசாங்கம் கருதுமானால், அதனை நிரூபிக்கும் சுயாதீன பொருளாதார ஆய்வு எங்கே? பலாலி மற்றும் KKS தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வுகள், எதிர்பார்க்கப்படும் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து, முதலீட்டுத் தேவைகள், இயக்கச் செலவுகள் மற்றும் பொருளாதாரப் பயன்கள் ஆகியவற்றை அரசாங்கம் வெளியிட வேண்டும்.

## அரசாங்கத்தின் நிலைப்பாட்டிலேயே முரண்பாடா?

2026 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் பேசிய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, பலாலி விமான நிலையத்தில் உள்ள குறைபாடுகள் சரிசெய்யப்படும் என்றும் KKS துறைமுகப் பணிகள் “மிக விரைவில்” ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். KKS திட்டத்திற்கு இந்தியா கணிசமான உதவியை வழங்கத் தயாராக இருப்பதையும் அவர் ஏற்றுக்கொண்டிருந்தார்.

ஆனால் பல மாதங்கள் கடந்த பின்னரும், வேலை எப்போது ஆரம்பமாகும் என்ற கால அட்டவணைக்குப் பதிலாக, திட்டங்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் அரசாங்கத்திடமே உள்ளது என்ற விளக்கங்களையே மக்கள் மீண்டும் கேட்கின்றனர். அப்படியானால் அரசாங்கத்திற்குள்ளேயே கொள்கை அல்லது முன்னுரிமை தொடர்பான வேறுபாடு உள்ளதா என்ற கேள்வி இயல்பாக எழுகிறது.

KKS - கடனிலிருந்து மானிய உதவிக்கு

KKS துறைமுகத்தின் நிலை இன்னும் முக்கியமானது. இந்தியா ஆரம்பத்தில் அதன் புனரமைப்பின் எஞ்சிய கட்டங்களுக்கு கடன் வசதியை வழங்க முன்வந்தது. பின்னர் திட்டச் செலவு அதிகரித்தபோது, மானிய அடிப்படையிலான உதவிக்குச் செல்ல இந்தியா முன்வந்தது.

கடனுக்கும் மானியத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. கடன் இலங்கையின் கடன் சுமையை அதிகரிக்கும்; மானியம் அதேவகையான திருப்பிச் செலுத்தும் சுமையை ஏற்படுத்தாது. எனவே இந்திய








மானிய உதவி கிடைக்கக்கூடிய நிலையில் தாமதத்திற்கு உண்மையான காரணம் என்ன? புரிந்துணர்வு ஒப்பந்தமா, தொழில்நுட்ப வடிவமைப்பா, சுற்றுச்சூழல் அனுமதியா, கொள்முதல் நடைமுறையா, தேசிய பாதுகாப்பா, வர்த்தகச் சாத்தியக்கூறா அல்லது அரசியல் முடிவா? வடக்கு மக்களுக்கு தெளிவான பதில் தேவை.

### பலாலி என்பது மத்தள அல்ல

மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தின் நட்டத்தை அமைச்சர் எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார். ஆனால் பலாலியை மத்தளையுடன் நேரடியாக ஒப்பிடுவது பொருத்தமானதல்ல. மத்தள புதிய விமான நிலையமாக எதிர்காலப் பயணிகள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் உருவாக்கப்பட்டது. பலாலிக்கு நீண்டகால வரலாறும் ஏற்கனவே செயல்படும் பிராந்திய விமானச் சந்தையும் உள்ளது.

யாழ்ப்பாணத்திற்கும் தென்னி ந்தியா விற்கும் இடையே நேரடி விமான இணைப்பு ஏற்கனவே உள்ளது. விமான நிலைய முனைய வசதிகளை அரசாங்கமே மேம்படுத்தியும் வருகிறது. எனவே பலாலிக்கு பயணிகள் வருவார்களா என்பது கேள்வியல்ல; பலாலியை எந்த அளவுக்கு வளர்க்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதே கேள்வி.

### KKS என்பது அம்பாந்தோட்டையும் அல்ல

KKS தென்னிந்தியாவிற்கு மிகவும் அருகில் அமைந்துள்ளது. நாகப்பட்டினம்-KKS பயணிகள் கப்பல் சேவையும் அதன் புவியியல் முக்கியத்துவத்தை நிரூபிக்கிறது. வடக்கிற்குத் தேவையான பொருத்தமான சரக்குகள் அனைத்தும் கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டு நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் வீதிப் பயணம் மேற்கொள்வதற்குப் பதிலாக நேரடியாக KKS-க்கு கொண்டுவரப்பட்டால், போக்குவரத்துச் செலவு, எரிபொருள், நேரம் மற்றும் கையாளுதல் செலவுகள் குறையக்கூடும்.

இது தமிழர்களுக்கு மட்டும் பயனளிக்கும் திட்டமல்ல. சரியாகத் திட்டமிடப்பட்டால் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கே பயனளிக்கக்கூடிய பிராந்திய வர்த்தக வாயிலாக அமையும்.

### பலாலி + KKS = வடக்கின் புதிய பொருளாதார நுழைவாயில்

இந்த இரண்டு திட்டங்களையும் தனித்தனியாகப் பார்ப்பதே மிகப்பெரிய தவறு. பலாலி வான்வழி நுழைவாயில்; KKS கடல்வழி நுழைவாயில். வீதி மற்றும் ரயில் இணைப்புகளுடன் இவை இரண்டும் அபிவிருத்தி




செய்யப்பட்டால், வடக்கையும் தென்னிந்தியாவையும் இணைக்கும் புதிய பொருளாதார வழித்தடத்தை உருவாக்க முடியும்.

KKS ஊடாக சரக்கு, மீன்பிடி, விவசாய உள்ளீடுகள், இயந்திரங்கள், கட்டுமானப் பொருட்கள், குளிர்சாதனச் சங்கிலி, களஞ்சிய வசதிகள் மற்றும் வடக்கின் ஏற்றுமதிகளை வளர்க்க முடியும். பலாலி ஊடாக சுற்றுலா, வர்த்தகப் பயணம், தொழில்சார் சேவைகள், முதலீட்டாளர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் நேரடி தொடர்புகளை அதிகரிக்க முடியும்.

பல தசாப்தங்களாக இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் கொழும்பையும் மேல் மாகாணத்தையும் மையமாகக் கொண்டிருக்கின்றன. மற்றொரு பிராந்திய பொருளாதார நுழைவாயிலை உருவாக்குவது தேசிய இறையாண்மைக்கு அச்சுறுத்தல் அல்ல; அது பொருளாதாரப் பரவலாக்கம்.

## வெளிப்படைத்தன்மையே பதில்

பலாலியும் KKS-உம் வளர்ந்தால், சர்வதேச தொடர்புகளுக்காக வடக்கு முழுமையாக கொழும்பில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் குறையும். இதையே சிலர் அரசியல் ரீதியில் சந்தேகத்துடன் பார்க்கின்றனர். யாழ்ப்பாணத்தில் சில விமர்சகர்கள் இந்த எதிர்ப்பை இனவாதத்துடனும் தொடர்புபடுத்தியுள்ளனர். ஆதாரமின்றி ஒருவரின் தனிப்பட்ட நோக்கத்தை இனவாதம் என்று தீர்மானிப்பது சரியல்ல.

ஆனால் வடக்கிலுள்ள திட்டங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள திட்டங்களை விட அதிகமான தடைகளுக்கும் தாமதங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனவா என்ற கேள்வியை நிராகரித்துவிடவும் முடியாது. அதற்கான பதில் ஒன்றே – வெளிப்படைத்தன்மை.

அரசாங்கம் திட்டங்களை வெளியிடட்டும். சாத்தியக்கூறு ஆய்வுகளை வெளியிடட்டும். இந்திய நிதியுதவி ஒப்பந்தத்தின் நிலையைத் தெரிவிக்கட்டும். ஆரம்ப மற்றும் நிறைவு தேதிகளை அறிவிக்கட்டும்.

பிமல் ரத்நாயக்க கூறுவது போல இறுதி முடிவு அரசாங்கத்திற்குரியது என்றால், அந்த அதிகாரத்துடன் பொறுப்பும் வருகிறது. வடக்கு இலங்கை ஏற்கனவே நீண்டகாலம் காத்திருக்கிறது.

இப்போது கேள்வி இந்தியா உதவத் தயாராக இருக்கிறதா என்பதல்ல. வடக்கு தனது முழுமையான பொருளாதார ஆற்றலை அடைவதற்கு கொழும்பு உண்மையாகவே தயாராக இருக்கிறதா என்பதே இன்று பதிலளிக்கப்பட வேண்டிய முக்கியமான கேள்வி.



# மன்னாரில் கனிம வள அகழ்வுக்கு அரசு அதிபர் தலைமையிலான சிறப்பு குழுவின் அனுமதி பெற வேண்டும்

( வாஸ் கூஞ்ஞ)

எதிர்காலத்தில் கனிமவள அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான சிறப்புக் குழுவின் அனுமதியும் பெறப்பட வேண்டும் எனப் புதிய நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது என இது தொடர்பாக நடைபெற்ற மன்னார் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கருங்கல்- கிரவல் மற்றும் மணல் உள்ளிட்ட கனிமவளங்களை அகழ்ந்தெடுப்பது தொடர்பில் புதிய சுற்றுநிருபத்தின் அடிப்படையிலான நடைமுறைகள் குறித்த விசேட கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை (28) மாலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலpல் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன்- பிரதேச சபை தவிசாளர்கள்- திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் கருங்கல் கிரவல் மற்றும் மணல் அகழ்வில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு புதிய நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் கனிமவள அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான சிறப்புக் குழுவின் அனுமதியும் பெறப்பட வேண்டும் எனப் புதிய நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாற்றங்கள் அடங்கிய 26.˚.1298.˚.110.˚.046 இலக்கமுடைய புதிய சுற்றுநிருபம் 2026 ஜூலை 6 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது எனவும் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீடமைப்பு மற்றும் வீதி புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகளுக்குக் கனிம வளங்கள் அதிகளவில் தேவைப்படுகின்றன எனவும்

இருப்பினும் அனுமதி பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தால் பல அபிவிருத்தித் திட்டங்கள் பின்னடைவைச் சந்தித்ததாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு அனு மதிப்ப த்திரங்களைப் பெறுவதற்கான நடைமுறைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளதுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனப் புதிய சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான கனிம வள அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கும் புதிய சுற்றுநிருபத்தில் பல்வேறு நடவடிக்கைகள் அறிம கப்ப டுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அபிவிருத்தி திட்டங்களுக்குத் தேவையான கனிம வளங்களை உரிய அனுமதிகளுடன் கட்டுப்பாட்டு விலைகளில் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

மேலும் கனிம வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்தவும் சட்டவிரோத அகழ்வுகளைத் தடுக்கவும் இந்நடவடிக்கை உதவும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புதிய நடைமுறையானது செப்டம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.



# இந்தியாவுக்கு இலங்கை நாடாளுமன்ற அதிகாரிகள் விஜயம்

ஹஸ்பர் ஏ ஹலீம் -

இலங்கை நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் திருமதி குஷானி ரோஹணதீர தலைமையிலான 26 பேர் கொண்ட இலங்கை நாடாளுமன்ற அதிகாரிகள் குழுவொன்று, 2026 ஆகஸ்ட் 24 முதல் 28 ஆம் திகதி வரை இந்தியாவுக்கு விஜயம் செய்தது.

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவை செயலகத்தின் கீழ் இயங்கும் ஜனநாயகங்களுக்கான நாடாளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (PRIDE) ஏற்பாட்டில் நடைபெற்ற திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பதே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சியின் மூலம் நிறுவன ரீதியான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன், இந்திய நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் இலங்கை நாடாளுமன்ற அதிகாரிகளுக்கு விரிவான அனுபவத்தையும் அறிவையும் வழங்குவதே நோக்கமாகக் கொண்டிருந்தது.

ஐந்து நாள் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி

ஐந்து நாள் நிகழ்ச்சி வரவேற்பு மற்றும் அறிமுக அமர்வுடன் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து மக்களவை செயலகத்தின் நிறுவன கட்டமைப்பு மற்றும் அதன் நிர்வாகப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சேவைகள் குறித்தும் அதிகாரிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். குறிப்பாக, உறுப்பினர்களுக்கான சேவைகள், உறுப்பினர்களுக்கான சேவை கொடுப்பனவுகள் மற்றும் நலன்புரி பிரிவுகள் ஆகியவற்றின் பணிகள் தொடர்பிலும் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும், நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கநெறிகள் தொடர்பான அமர்வுகளும் இடம்பெற்றதுடன், நாடாளுமன்ற செயற்பாடுகளை நிர்வகிக்கும் நிறுவன ரீதியான கட்டமைப்பு தொடர்பிலும் அதிகாரிகள்






அறிவைப் பெற்றுக்கொண்டனர்.

**நாடாளுமன்ற குழுக்கள் தொடர்பான பயிற்சிகள்**

நிறைவேற்று அதிகாரத்தின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் நாடாளுமன்ற குழுக்களின் பங்கு மற்றும் செயற்பாடுகள் குறித்தும் நிகழ்ச்சியில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன், குழுச் செயலகங்கள் மற்றும் அவற்றின் கிளைகளின் நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

சர்வதேச நாடாளுமன்ற உறவுகள் மற்றும் நெறிமுறை நடைமுறைகள் குறித்தும் அதிகாரிகளுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன. இந்திய நாடாளுமன்றத்தில் இயங்கும் துறைகளுடன் தொடர்புடைய நிரந்தரக் குழுக்கள் (DRSCs) தொடர்பான அறிமுகமும் வழங்கப்பட்டது.

மேலும், சட்டமன்றங்களில் சபைத் தலைமை அதிகாரிகளின் பங்கு மற்றும் அதிகாரங்கள், நாடாளுமன்ற செயலகத்தின் வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் நிர்வகித்தல், ஒருங்கிணைந்த நிதிப் பிரிவு (IFU) மற்றும் வரவு-செலவு மற்றும் நாடாளுமன்றப் பிரிவுகளின் (B&P) செயற்பாடுகள் தொடர்பிலும் அமர்வுகள் இடம்பெற்றன.

இந்திய நாடாளுமன்றத்திற்கு விஜயம்

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இலங்கை நாடாளுமன்ற அதிகாரிகள் குழுவினர் நாடாளுமன்ற நூலகக் கட்டிடம் மற்றும் நாடாளுமன்ற வளாகத்திற்கு விஜயம் செய்தனர்.

இதன்போது மக்களவை மற்றும் மாநிலங்களவை அவைகள், அத்துடன் சம்விதான் சதனின் மத்திய மண்டபம் ஆகியவற்றையும் பார்வையிட்டனர்.

மேலும், குழுவினர் ஆக்ராவிற்கும் விஜயம் செய்து, உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹால் மற்றும் ஆக்ரா கோட்டை ஆகியவற்றை பார்வையிட்டனர். டெல்லியிலும் உள்ளூர் சுற்றுலா நடவடிக்கைகளில் பங்கேற்றனர்.

இதன் மூலம் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் இந்தியாவின் கலாசார மற்றும் வரலாற்று சிறப்புகளை அறிந்துகொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

**இந்தியா-இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் முயற்சி**

2025 ஏப்ரல் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட அரசுமுறை விஜயத்தின்போது அறிவிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட திறன் மேம்பாட்டு கட்டமைப்பின் கீழ் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கட்டமைப்பின் கீழ் இலங்கை நிபுணர்களுக்காக ஆண்டுதோறும் 700 தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சி, வலுவான ஜனநாயக நாடுகளான இந்தியா மற்றும் இலங்கை இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் உறுதிப்படுத்துவதுடன், நாடாளுமன்றங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், நிறுவன ரீதியான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும் முக்கிய பங்களிப்பை வழங்குகிறது.



# ஊழல் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் பியங்கர ஜயரத்னவுக்கு 7 ஆண்டுகள் கடூழிய சிறை

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் குற்றச்சாட்டின் கீழ் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட முன்னாள் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பியங்கர ஜயரத்னவிற்கு 7 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2014 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மே தின பேரணியில் கலந்துகொண்ட அரசியல் ஆதரவாளர்களுக்கு உணவு வழங்குவதற்காக, ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் கணக்கிலிருந்து பணம் செலுத்தியமை தொடர்பாக, அன்றைய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரான பியங்கர ஜெயரத்னவிற்கு எதிராக இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹைல் முன்னிலையில் இடம்பெற்ற நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர், அதன் தீர்ப்பை அறிவிப்பதற்காக (01) ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அரசுக்குச் சொந்தமான ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் கணக்கிலிருந்து குறித்த உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக மாரவில பகுதியில் அமைந்துள்ள தனியார் கேட்டரிங் நிறுவனம் ஒன்றுக்கு 3,30,000 ரூபாய் பணம் செலுத்தப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த பணத்தைச் செலுத்துவதற்காக அன்றைய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சராக இருந்த பியங்கர ஜெயரத்ன, ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியைத் தூண்டியுள்ளதாகக் குற்றப்பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

# ‘அணையா தீபம்’ செம்மணி நீதிக்காக கனடாவில் ஒன்றுதிரண்ட தமிழர்கள்



‘செம்மணி எழுச்சி - அணையா தீபம்’ ‘விழித்தெழு தமிழா!’ நிகழ்வு நேற்று பெருந்திரளான மக்களின் ஆதரவுடன் கனடா ALBERT CAMPBELL SQUARE இல் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் நினைவாகவும், நீதிக்காகக் காத்திருக்கும் குடும்பங்களின் குரலாகவும் ஒன்றிணைந்து நடாத்தப்பட்ட செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் என்புக் கூடுகளாக மீட்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு உறவுக்கும் நீதி கேட்டு ‘செம்மணி எழுச்சி - அணையா தீபம்’ - ‘விழித்தெழு தமிழா!’ மிகுந்த காத்திரமாக நடைபெற்றது.

எம்மினத்துக்காகக் குரல்கொடுப்பதற்கு கனேடிய மண் மேடை கொடுத்தமைக்கு நன்றி கூறியபடி ஆரம்பமாகிய நிகழ்வில்

செம்மணி என்பது வெறும் மண்ணல்ல... பல குடும்பங்களின் வலியான வரலாறு!

காணாமற் போன எம் உறவுகள் குறித்த உண்மைகள் வெளிவரவேண்டும் என்ற எம்மினத்தின் ஆறாத வலிகள், தேடல்கள், காத்திருப்புக்கள், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மௌனித்த வார்த்தைகள்... என எல்லாவற்றுக்கும் சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாகப் பதிலைப் பெற்றுத் தரவே இன்று நாங்கள் கூடியுள்ளோம் என்ற செய்தி மற்றும் 'அன்னைத் தமிழீழ மண்ணே" என்ற தாயகப்பாடலுடன் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

றொறண்டோ மேயர் பதவி வேட்பாளரும் நீண்ட கால கனேடிய அரசியல் பிரமுகருமான பிராட் பிராட்பேர்ட் தனது உரையில் கனடிய தமிழர்களால் தமது இனத்துக்கு நீதி கேட்டு நடாத்தப்படும் மேற்படி போராட்டத்திற்கு பக்க பலமாகவும் உறுதுணையாகவும் தானும் தனது கட்சியும் தொடர்ச்சியாக பயணிப்போம் என்றும். சர்வதேச நீதியைப் பெறுவதில் தமது பங்கும் பெரிதாக இருக்கும் என தெரிவித்தார்.


சுவிட்சர்லாந்து
எழுத்தாளர்
சண் தவராஜா
எழுதிய
சுவிஸ் தமிழ்
எழுத்தாளர்கள்
( தொகுதி 2 )
நூல் வெளியீடு
நாள்:
05-09-2026
மாலை 5.30 மணி
இடம்:
திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்
மேலரண் சாலை, திருச்சிராப்பள்ளி
வெளியீடு :
இனிய நந்தவனம்
பதிப்பகம்
சுவிஸ்
தமிழ்
எழுத்தாளர்கள்
(தொகுதி 2)
சண் தவராஜா